
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஆகஸ்டு 2007
ரூ. 5.00




# பச்சோந்தியின் கனவு பலிக்குமா?

படிப்பகம்

www.padippakam.com

# காசுமீர்: ‘தேச பக்தி’யால் மறைக்கப்படும் சமூக அவலங்கள்

**கா**சுமீர் மக்களின் தாய்மொழியான காசுமீரியில், ‘‘தற்கொலை’’யைக் குறிப்பிடுவதற்கான சொல்லே கிடையாது. அம்மாநில மக்கள், தற்கொலையைக் குறிப்பிடுவதற்கு அந்நிய மொழியான பெர்சிய மொழிச் சொல்லைத்தான் பயன்படுத்தி வந்துள்ளனர். காசுமீர் மக்கள் பின்பற்றிவரும் ‘‘சூஃபி’’ மரபின் காரணமாக, அம்மக்களிடையே தற்கொலை செய்து கொள்வது அரிதினும் அரிதாக இருந்து வந்ததால், அவர்களுக்குத் தங்களின் தாய்மொழியில் தற்கொலையைக் குறிப்பிடுவதற்கான சொல்லே தேவைப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

ஆனால், இன்றோ, தற்கொலைக்கு எதிரான மன உறுதி, மரபெல்லாம் அம்மாநிலத்தில் சிதைந்து சின்னாபின்னமாகி விட்டது. இப்படியெல்லாம் கூடவா தற்கொலை செய்து கொள்வார்கள் என அதிர்ந்து போகுமளவுக்கு, அம்மாநிலத்தில் தற்கொலைச் சாவுகள் கோரமாக நடப்பது அன்றாட நிகழ்வாகிவிட்டது.

1980-களின் தொடக்கத்தில் கூட, காசுமீரில் தற்கொலைச் சாவுகள் அரிதினும் அரிதான நிகழ்வாகத்தான் இருந்து வந்தது. ஆனால் இன்றோ, இந்தியாவிலேயே காசுமீர் மாநிலத்தில்தான் மிக அதிகமான தற்கொலைச் சாவுகள் நடப்பதாகப் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. 1980-இல் காசுமீரில் 10 இலட்சம் பேரில் ஒருவர்தான் தற்கொலை செய்து கொண்டார். இன்று, இந்த எண்ணிக்கை 10 இலட்சத்திற்கு 200 பேராக, பல மடங்கு அதிகரித்து விட்டது. இந்த எண்ணிக்கை தேசிய சராசரியைவிட (10 இலட்சம் பேருக்கு 110 தற்கொலைகள்) மிக அதிகமாகும்.

1989-க்குப் பிறகு, காசுமீரின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை ஒடுக்க இராணுவம் இறக்கிவிடப்பட்ட பிறகுதான், அம்மாநிலத்தில் தற்கொலைச் சாவுகள் அதிகமாக நடக்கத் தொடங்கியுள்ளன. இது, ஏதோ மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் விதமான, அபாண்டமான குற்றச்சாட்டு அல்ல. அம்மாநிலத்தில் நடந்துவரும் தற்கொலைச் சாவுகள் பற்றி, மனநோய் அதிகமாகப் பரவி வருவது பற்றி எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள், இந்த உண்மையை அம்பலப்படுத்தியுள்ளன.

1989-க்குப் பிறகு,கடந்த 17 ஆண்டுகளில் அம்மாநிலத்தில் தற்கொலைக்கு முயற்சி செய்தவர்களின் எண்ணிக்கை 24,000; இவர்களுள் 3000 பேர் இறந்து போய்விட்டனர். தற்கொலைக்கு முயற்சிப்பவர்களில் பெரும்பாலோர் 16 வயதில் இருந்து 25 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் என்று அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இத்தற்கொலைச் சாவுகளின் எண்ணிக்கையை வேறொரு புள்ளிவிவரத்துடன் ஒப்பிட்டால்தான், இந்த சமூக அவலத்தின் அபாயம் புரிய வரும். 1989-க்குப் பிறகு, காசுமீரில் நடந்து வரும் ‘‘வன்முறை’’ போராட்டங்களின் காரணமாக, கடந்த 17 ஆண்டுகளில் 70,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது. இதோடு ஒப்பிட்டால், இந்த ‘‘வன்முறை’’ச் சூழல் ஏற்படுத்திவரும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுத் தற்கொலைக்கு முயன்றவர்களின் எண்ணிக்கை, மூன்றில் ஒரு பங்காக இருக்கிறது.

‘‘தற்கொலை மட்டுமல்ல, தற்கொலைக்குத் தேர்ந்தெடுக்கும் வழியும் காசுமீரில் இதுவரை கேள்விப்படாத ஒன்றாக இருக்கிறது. தொண்டைக் குழியை அறுத்துக் கொண்டு தற்கொலை செய்து கொள்ள முயலுவது போன்ற கோரமான வழிகளைப் பாதிக்கப்பட்டவர்கள் தேர்ந்தெடுப்பதாக மனநல மருத்துவர் அர்ஷத் ஹுசைன் கூறுகிறார். முசுலீம் மதப் பண்பாட்டின்படி, ‘‘தற்கொலை செய்து கொள்வது மதத்திற்கு விரோதமானது’’ எனக் கருதப்படுவதால், வெளியே தெரியும் புள்ளிவிவரங்களைக் காட்டிலும், உண்மை நிலவரம் இன்னும் மோசமானதாக இருக்கும் என மனநல மருத்துவர்கள் தொடங்கி போலீசு அதிகாரிகள் வரை, பலரும் ஒத்துக் கொள்கிறார்கள்.

குடும்பச் சச்சரவு, கடன் தொல்லை, வாழ்க்கையில் விரக்தி, வேலை கிடைக்காதது எனத் தற்கொலை செய்து

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

ஜீலம் நதியில் குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்ற ரஃபீகா பானுவைக் காப்பாற்றும் இளைஞர்கள். (நன்றி: இந்தியா டுடே.)




படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 22**

**இதழ் 10**

**ஆகஸ்டு 2007**

**உள்நாடு**
**தனிஇதழ்: ரூ.5.00**
**ஆண்டுசந்தா: ரூ.60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**
**தொலைபேசி: 94446 32561**


## சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்:

# நீர்க்குமிழி பெருத்தால்...

''எந்தவிதத் தொழிலாளர் சட்டங்களுக்கும் உட்படாத, அரசின் வரிகள் எதுவும் பாதிக்காத, ஒரு தனி சாம்ராஜ்யமாக இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைவது வருங்காலத்திற்கு நல்லதுதானா என்பதே விவாதத்துக்குரிய விஷயமாகத் தெரிகிறது.'' *(தினமணி, 26.6.07)*

''சிறப்புப் பொருளாதார மண்டலங்களால் ஈர்க்கப்படும் தொழில் நிறுவனங்களுள், பெரும்பாலானவை மிகப் பெரும் முதலீட்டில் தொடங்கப்படுகின்றன. எந்தவிதமான தொழில்நுட்பப் பயிற்சியும் பெறாத தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, இது ஒன்றுதான் தக்க வழியா என்பது தெளிவாகத் தெரியவில்லை.'' *(தி ஹிந்து, 24.5.07, பக்: 23)*

மேலே காணப்படும் இரண்டு கருத்துக்களும், சிறப்புப் பொருளாதார மண்டலத்தை எதிர்ப்பவர்களால் கூறப்பட்டவையல்ல. முன்னது, ''தினமணி'' நாளிதழின் தலையங்கக் கருத்து. பின்னது, இந்தியாவின் வர்த்தகக் கொள்கை மீளாய்வு தொடர்பாக நடந்த கூட்டத்தில், உலக வர்த்தகக் கழகம் முன்வைத்த அறிக்கையில் கூறப்பட்ட விமர்சனம்.

''எந்தவிதமான அதிகார வர்க்கத் தடைகளுமின்றி, அந்நிய மூலதனத்தையும், அதி உயர் தொழில் நுட்பத்தையும் இறக்குமதி செய்வது; ஏற்றுமதி வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், அந்நியச் செலாவணி ஈட்டுவதை உயர்த்துவது; வேலை வாய்ப்பைப் பெருக்குவது'' ஆகிய நோக்கங்களுக்காகத்தான் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்குவதாக இந்திய அரசு கூறி வருகிறது. ஆனால், சிறப்புப் பொருளாதார மண்டலங்களால், இந்தப் பலன்கள் கிடைக்கும் என்பதை ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவே ஒத்துக் கொள்ளத் தயங்குகின்றன. ''தினமணி''யின் தலையங்கமும், உலக வர்த்தகக் கழகத்தின் அறிக்கையும் இந்தத் தயக்கத்தின் வெளிப்பாடுகள்தான்.

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க 2001-ஆம் ஆண்டே 2,400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இம்மண்டலத்தில் அமையும் ஆலைகள் மூலம் பல ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும்; இதனால் அப்பகுதியில் சாதிக் கலவரம் நடப்பது தடுக்கப்படும் என்றெல்லாம் அன்று கதையளந்தார்கள். ஆனால், ஆறாண்டுகளுக்குப் பிறகு பார்த்தால், கையகப்படுத்தப்பட்ட நிலத்தைச் சுற்றி வேலை அமைக்கும் பணிதான் நான்குநேரியில் நடந்து கொண்டிருக்கிறது. ''வேலி அமைத்தவுடன், அங்கு குடியிருப்புகள் கட்டும் பணி தொடங்கும்; அது முடிந்தபிறகுதான் ஆலைகள் வரும்'' என்று இப்பொழுது புதுக்கதை சொல்கிறார்கள்.

நான்குநேரி திட்டம் இப்படி ஆமை வேகத்தில் நகர, ''இந்த ஆண்டிற்குள் தமிழகத்தில் 9 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 7,107 கோடி ரூபாய் மூலதனத்தில் அமையும்; இதன் மூலம் 1,76,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்'' என டாம்பீகமாக அறிவித்தது தி.மு.க. அரசு. ஆனால், இத்திட்டங்களுக்காக இதுவரை வெறும் 772.50 கோடி ரூபாய்தான் மூலதனம் போடப்பட்டிருப்பதாக அழுது புலம்பும் ''ஃபிக்கி'' என்ற தரகு முதலாளிகள் சங்கம், தமிழக அரசு இன்னும் முனைப்பாகச் செயல்பட வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களால், இந்தியாவின் உற்பத்தி சார்ந்த தொழில் வளர்ச்சிக்கு ஏதாவது பயன் கிட்டுமா என்பதும் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. ஏனென்றால், சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அனுமதி கேட்டு வந்துள்ள விண்ணப்பங்களுள் 63 சதவீத விண்ணப்பங்கள் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை அமைக்கத்தான் அனுமதி கோரியுள்ளன.

இதுவொருபுறமிருக்க, ஏற்கெனவே நடந்து வரும் தொழில்கள், சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு இடம் பெயர்வதை ''வளர்ச்சி'' என்று சொல்ல முடியாது; சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்படும் பண்டங்கள், உள்நாட்டுச் சந்தைக்குள் நுழைந்தால், இந்தியப் பொருளாதாரத்திற்கு மிகப் பெரும் இழப்பு ஏற்படும் என முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களே அச்சப்படுகின்றனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தாராளமயத்தின் தீவிர பக்தரான நிதியமைச்சர் ப.சிதம்பரம், சிறப்புப் பொருளாதார மண்டலங்களால் அடுத்த ஐந்தாண்டுகளில் மைய அரசுக்கு 1,75,000 கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்படும் எனக் கூறி, வர்த்தக அமைச்சர் கமல்நாத்தோடு முட்டி மோதிக் கொண்டிருக்கிறார். உலக வர்த்தகக் கழகம் கூட இந்த வரி இழப்பு பற்றிக் கவலைப்படுகிறது.

தனியார்மயம் - தாராளமயத்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைக்கப் போகும் பலன்கள் என ஆளும் கும்பல் ஊதிப் பெருக்குவதெல்லாம், அடுத்த நிமிடமே நீர்க்குமிழி போல உடைந்து வருகின்றன. சிறப்புப் பொருளாதார மண்டலமும் இந்தத் தோல்வியில் இருந்து தப்பப் போவதில்லை.

www.padippakam.com

# நக்சல்பாரி 'அபாயம்': அரசை அச்சுறுத்துவது ஆயுதமா, அரசியலா?

கடந்த ஜூன் 25ம் தேதியன்று பெரியகுளம் முருகன்மலைப் பகுதியில் மாவோயிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த 3 தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பழனிவேல், வேல்முருகன், முத்தமிழ்ச்செல்வன் என்ற இந்த 3 பேரிடமிருந்து துப்பாக்கிகள், கையெறி குண்டுகள் போன்ற ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக போலீசு கூறுகிறது. மற்ற சிலர் தப்பிவிட்டதாகக் கூறி, சிலருடைய புகைப்படங்களை ஊடகங்களில் வெளியிட்டிருக்கிறது, போலீசு. ஜூலை 8ம் தேதியன்று இரவு சுந்தரமூர்த்தி, கார்த்திக், ஈஸ்வரன் ஆகியோர் திருப்பூரில் கைது செய்யப்பட்டு, போலீசு விசாரணைக்குப்பின் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தப்பியவர்களைப் பிடிப்பதற்கு மதுரை மற்றும் பிற நகரங்களிலும் "கியூ" பிரிவு உளவுத்துறைப் போலீசு வீடு வீடாகச் சோதனை நடத்தியிருக்கிறது.

வீரப்பனின் பிணத்தைச் சுட்டுக் கைப்பற்றிய விஜயகுமார் தலைமையிலான அதிரடிப்படை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் எங்கும் தேடுதல் வேட்டை நடத்தி வருகிறது.

''தமிழகமெங்கும் 70 பேர் கொண்ட 70 ஆயுதக் குழுக்கள்!'', ''பெரியகுளத்தில் ஏ.கே-47 துப்பாக்கிகள், ஆயுதப் புதையல்கள், லேப்டாப் கம்ப்யூட்டர்கள்'', ''ஆயுதப்படையில் சேருவதற்குத் தயாராக 600 மாணவர்கள்'' என்று விஜயகாந்த் சினிமாவை விஞ்சும் வகையில் திரைக்கதை எழுதுகின்றன, பத்திரிகைகள். 'நக்சல் வேட்டை' என்று போலீசு அராஜகத்தைக் கொண்டாடுவது, விஜயகுமாரையும் உளவுத்துறை போலீசு அதிகாரிகளையும் ஏதோ உயிருக்குத் துணிந்த வீர சாகச நாயகர்களாகச் சித்தரிப்பது, கைது செய்யப்பட்ட தோழர்களை 'அவன், இவன்' என்று ஏகவசனத்தில் எழுதுவது - என நாலாந்தரமான போலீசு எடுபிடிகளாகவும் பரபரப்புக்காகப் பச்சைப் பொய்களைப் புனைந்து எழுதும் பேனாத்தரகர்களாகவுமே பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

மாவோயிஸ்டுகள் தமிழகத்தைச் சூழ்ந்திருக்கும் மாபெரும் அபாயம் போல ஒரு சித்திரம் திட்டமிட்டே உருவாக்கப்படுகிறது. எனினும் இந்தத் 'தேடுதல் வேட்டை'க்குத் தலைமை தாங்கும் விஜயகுமார், நாஞ்சில் குமரன் போன்ற போலீசு அதிகாரிகள் ''அச்சப்படும் அளவுக்கு தமிழகத்தில் மாவோயிஸ்டுகள் வளர்ந்துவிடவில்லை'' என்று கூறுகின்றனர். கியூ பிரிவு எஸ்.பி. அசோக்குமார் ''தமிழகத்தில் மாவோயிஸ்டுகளின் எண்ணிக்கை 25 முதல் 35 வரை இருக்கலாம் என்பது எங்கள் கணக்கு'' என்று பேட்டி கொடுக்கிறார். ''கைப்பற்றப்பட்டுள்ள ஆயுதங்கள் மிகச் சாதாரணமானவை'' என்றும் போலீசே கூறுகிறது.

பிறகு ஏன் இந்த ஆரவாரம்? பெரியகுளத்தில் வேட்டை, குற்றாலத்தில் வேட்டை, கொடைக்கானலில் வேட்டை, தருமபுரியில் வேட்டை என்று விஜயகுமாரின் காட்டு சீன் ஸ்டில்கள், சினிமா ஸ்டில்களைப் போல அன்றாடம் பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சிகளுக்கும் வழங்கப்படுவது ஏன்? பெரியகுளத்தில் நிரந்தரமான அதிரடிப்படை முகாம் எதற்கு?

இது போலீசின் வழக்கமான விளம்பர மோகம் அல்ல; மக்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் அரச பயங்கரவாதம். 'நக்சல்பாரி' என்ற சொல்லைக் கேட்டாலே மக்களுக்கு அதிரடிப் படையின் கொடூரமுகம் நினைவுக்கு வரவேண்டும் என்பதும், அவர்கள் அஞ்சி நடுங்கி ஒதுங்க வேண்டும் என்பதும்தான் இந்த நடவடிக்கையின் முதல் நோக்கம்.

இரண்டாவதாக, இது தீவிரவாத ஒழிப்பில் மன்னனை விஞ்சிய ராஜவிசுவாசியாகத் தன்னைச் சித்தரித்துக் கொள்ள கருணாநிதி மேற்கொள்ளும் முயற்சி. ''தமிழகத்தைத் தீவிரவாத அபாயத்திலிருந்து காப்பாற்றி அமைதியான வாழ்க்கையை அளிக்கும் வல்லமை எனக்கு மட்டும்தான் உண்டு. கருணாநிதி ஆட்சிக்கு வந்தால் தீவிரவாதம் தலைவிரித்தாடுவதுடன், சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துவிடும்'' என்பது ஜெயலலிதா நிரந்தரமாக முன் வைத்துவரும் பாசிச அரசியல். துக்ளக் முதல் இந்து வரையிலான பார்ப்பனப் பத்திரிகைகளால் வழிமொழியப்படும் பிரச்சாரமும் இதுதான்.

தற்போது ஜெயலலிதாவின் ஆசி பெற்ற விஜயகுமாரை 'நக்சல் ஒழிப்பு நடவடிக்கையின்' தலைவராக நியமித்திருப்பதன் மூலம் 'வசிட்டன் வாயால் பிரம்மரிஷிப் பட்டம்' வாங்கத் துடிக்கிறார், கருணாநிதி. மேலும் பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக் காடாக தமிழகத்தைப் பேணுவதற்கும், ஆளும் வர்க்கங்களின் மனம் கவர்ந்த அமைதிப் பூங்காவாக மாநிலத்தை 'மார்க்கெட்டிங்' செய்வதற்கும் நக்சல் வேட்டை என்னும் இந்த ஊதிப்பெருக்கப்பட்ட நடவடிக்கை திமுக அரசுக்குத் தேவைப்படுகிறது.

போலீசைப் பொறுத்தவரை தனது கேள்விக்கிடமற்ற அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கும், தனது கிரிமினல் நடவடிக்கைகளை மறைத்துக் கொள்வதற்கும் கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் அது பயன்படுத்திக் கொள்கிறது. மிகவும் அபாயகரமான பணியில் இராப்பகலாக ஈடுபட்டிருப்பதைப் போன்ற தோற்றத்தை மக்களிடம் ஏற்படுத்துவதற்காகவே, காடுகளிலும் மலைகளிலும் ''அவுட்டோர் ஷூட்டிங்'' நடத்துகிறது. தான் நடத்திய, நடத்தப் போகிற எல்லா 'போலி மோதல்' கொலைகளையும் மறைப்பதற்கான திரைச்சீலைகளாக இவற்றைப் பயன்படுத்துகிறது.

இத்தனை பயங்கரமாகச் சித்தரிக்கப்படும் பெரியகுளம் சம்பவத்தில் நடந்திருப்பது என்ன? 3 பேர் சில ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குண்டு வெடிப்பு, போலீசுடன் மோதல், உயிரிழப்பு என்று எதுவும் நிகழவில்லை. கைது செய்த போலீசாருக்கோ ஒரு சிராய்ப்புக் காயம் கூட ஏற்படவில்லை. போலீசின் சட்டம்-ஒழுங்கு பார்வையின் படியேகூட இது மிகவும் சாதாரணமான குற்றம்தான்.

தினகரன் பத்திரிகை மீது பட்டப்பகலில் போலீசின் முன்னிலையில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் இதனை ஒப்


படிப்பகம்

www.padippakam.com


பிட்டுப் பாருங்கள். 3 ஊழியர்கள் கொல்லப்பட்டிருந்தும், அந்த வன்முறை வெறியாட்டம் மறுக்க முடியாதவண்ணம் வீடியோவில் பதிவு செய்யப்பட்டிருந்தும், ''தாக்குதலுக்குக் கருத்துக் கணிப்புதான் காரணம்'' என்று கூறி, சட்டமன்றத்திலேயே அதனை நியாயப்படுத்தினார், கருணாநிதி.

அண்ணன் அழகிரிக்கு 2% தான் ஆதரவு என்று எழுதியதற்காக ஒரு பத்திரிகை அலுவலகத்தை ஊழியர்களுடன் சேர்த்துக் கொளுத்தலாமாம். அழகிரி ஆதரவாளர்களின் கோபத்துக்கான காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டுமாம். ஆனால், ஒரு இலட்சம் விவசாயிகளைத் தற்கொலைக்கும், பல் ஆயிரம் முஸ்லிம்களையும் தலித் மக்களையும் படுகொலைக்கும், கோடிக்கணக்கான மக்களைப் பட்டினிக்கும் தள்ளும் இந்த அரசமைப்புக்கு எதிராக ஆயுதமேந்துவது தீவிரவாதமாம்!

மூன்று இளைஞர்கள் கையில் துப்பாக்கி வைத்திருந்தார்கள் என்ற குற்றத்துக்காகத் தமிழகமெங்கும் மாவோயிஸ்டு அமைப்பினர் மீது தேடுதல் வேட்டை நடத்துகிறது போலீசு. சிவகங்கையில் நட்ட நடுவீதியில் ரிமோட் குண்டு வைத்து தி.மு.க. நகராட்சித் தலைவரை தி.மு.க.-காரனே கொலை செய்கிறானே, அந்தப் படுகொலைக்கு என்ன காரணம்? அன்று உள்ளாட்சித் தேர்தலையும், இன்று கூட்டுறவுத் தேர்தலையும் ரத்து செய்ய வைத்த வன்முறைக்கான காரணம் என்ன? தமிழ்நாட்டையே கொள்ளைக் காடாக்கி வரும் கழக வீரப்பன்கள் மீது எந்த அதிரடிப்படை ஏவப்பட்டிருக்கிறது?

'நக்சல் ஒழிப்பு' நடவடிக்கையில் காட்டப்படும் இந்தத் தீவிரத்தில் ஒரு சதவீதமாவது 'தீண்டாமை ஒழிப்பு', 'லஞ்ச ஒழிப்பு', 'மதவெறி ஒழிப்பு' நடவடிக்கைகளில் காட்டப்பட்டதுண்டா? காடு மலையெல்லாம் தேடி அலைய வேண்டிய தேவையே இல்லாமல் கண்முன்னால் காட்சி தரும் இந்தக் கிரிமினல் குற்றங்களை ஒழிக்க ஒரு அமைதிப்படையாவது ஏவப்பட்டதுண்டா?

'வன்முறையா மென்முறையா' என்பதல்ல பிரச்சினை. இந்த அரசமைப்பில் ஐக்கியமாகி, அரசு சன்மானங்களைப் பொறுக்கித் தின்னவும், பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தரகு வேலை செய்யவும், மக்கள் சொத்தைக் கொள்ளையடித்துப் பங்கு போட்டுக் கொள்ளவும் ஆயுதம் ஏந்தி மோதிக் கொள்வதில் ஆளும் வர்க்கத்துக்கு எந்த ஆட்சேபமும் இல்லை. மக்கள் யுத்தக் குழுவினர் சந்திரபாபு நாயுடுவுக்கு வைத்த குண்டைக் காட்டிலும், சிவகங்கையில் வைக்கப்பட்ட ரிமோட் குண்டுதான் நவீன தொழில்நுட்பம். அவ்வாறிருந்தும் சிவகங்கையில் தேடுதல் வேட்டை கிடையாது, காரணம், இது திமுக ஆட்சி என்பது மட்டுமல்ல; இத்தகைய வன்முறைகள் எதுவும் ஆளும் வர்க்கத்துக்கு எதிரானவையல்ல என்பதுதான் அடிப்படைக் காரணம்.



தி.மு.க.வின் கிரிமினல் அரசியல்: உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சிவகங்கை நகர்மன்றத் தலைவர் முருகனின் கார் (மேல்படம்); போலீசின் பாதுகாப்போடு மதுரை தினகரன் அலுவலகத்தைத் தாக்கிவிட்டுத் திரும்பும் அழகிரியின் ''தம்பிகள்''.

மாறாக, ''இந்த கொள்ளைக்கார அரசமைப்பைத் தூக்கியெறிவதற்காக ஆயுதம் ஏந்தவேண்டும்'' என்று கூறுவதனால்தான், ஜனநாயகத்தின் எல்லாத் தூண்களும் 'தீவிரவாதிகள்' என்று முத்திரை குத்தி நக்சல்பாரிகள் மீது பாய்ந்து படுங்குகின்றன.

குறிப்பாக, தனியார்மய-தாராளமயக் கொள்கைகளை எதிர்த்துக் கிளர்ந்தெழும் உழைக்கும் மக்கள், நாளை கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் அணிதிரண்டு விடுவார்களோ என்ற அச்சம்தான் ஆளும் வர்க்கங்களை நடுங்கச் செய்கிறது. துப்பாக்கி-காடு-பயிற்சி என்பதல்ல எதிரிகளின் அச்சத்துக்குக் காரணம். மார்க்சியம்-லெனினியம்-மாசேதுங் சிந்தனை என்ற கம்யூனிசச் சித்தாந்தம்தான் அவர்களை அச்சுறுத்துகிறது. கம்யூனிசப் புரட்சியாளர்களின் உறுதியும் விடாப்பிடியான முயற்சியும் அவர்களுக்குப் பீதியூட்டுகிறது.

இதனை மறைத்துக் கொண்டு, 'வேலையில்லாத பட்டதாரிகளும் விரக்தியுற்ற இளைஞர்களும்தான் நக்சல்பாரிகளாக மாறிவிடுவதாக'க் கதையளக்கிறார்கள். 'இந்த சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டால் நக்சலியம் ஒழிந்துவிடும்' என்று கனாக் காண்கிறார்கள். வேலையின்மை, வறுமை காரணமாக நக்சலியம் பரவுகிறது (திருட்டு, விபச்சாரம் போன்ற கிரிமினல் குற்றங்கள் பரவுவதைப் போல) என்று கூறுவதன் மூலம் நக்சல்பாரி அரசியலையே கிரிமினல் குற்றமாகச் சித்தரிக்கிறார்கள்.



கைது செய்யப்பட்டுள்ள நக்சல்பாரி புரட்சியாளர்கள் சுந்தரமூர்த்தி, கார்த்திக் மற்றும் ஈஸ்வரன்.

விரக்தியுற்றவர்கள்தான் நக்சல்பாரிகளாகிறார்கள் என்ற கூற்று உண்மையாயிருப்பின், தற்கொலை செய்து கொண்ட ஒரு லட்சம் விவசாயிகளும் நக்சல்பாரிகளாகியிருக்க வேண்டும். நக்சல்பாரிகளை உந்தித் தள்ளும் உணர்ச்சி, விரக்தி அல்ல; அது சமூக அநீதிகளுக்கு எதிரான ஆவேசம். அவர்களை வழிநடத்துவது மார்க்சியம்-லெனினியம் என்ற அறிவியல் பார்வை. நக்சல்பாரிகள் சமூகத்தைத் தம் தோளில் சுமப்பவர்கள், மக்கள் நலனுக்காகத் தம் சொந்த வாழ்வின் இன்பங்களைத் தாமே முன்வந்து துறப்பவர்கள். நக்சல்பாரிகள் விரக்தியுற்ற இளைஞர்களுமல்ல, கம்யூனிசம் சோற்றால் அடித்தால் செத்துவிழும் கொள்கையுமல்ல.

நக்சல்பாரிகளின் அரசியலைத் தவறு என்று யாராலும் வாதாட முடியாது. நக்சல்பாரி இயக்கத்தின் ஒரு சாதாரணத் தொண்டன் எழுப்பும் அரசியல் கேள்விக்கு எந்த ஓட்டுப் பொறுக்கித் தலைவனாலும் பதில் சொல்ல முடியாது. நக்சல்பாரிகளை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள ஆளும் வர்க்கம் அஞ்சுகிறது. எனவேதான் அச்சுறுத்துகிறது, அவதூறு செய்கிறது, மக்களிடமிருந்து தனிமைப்படுத்த முயற்சி செய்கிறது.

பெரியகுளம் சம்பவத்தையொட்டி நக்சல்பாரிகளுக்கு எதிராக அரசும் ஊடகங்களும் மேற்கொண்டு வரும் பொய்ப்பிரச்சாரத்தை நாம் முறியடிக்க முடியும். ஆனால், மேற்கூறிய பிரச்சாரங்கள் மக்கள் மத்தியில் எடுபடவில்லையென்றோ, மாவோயிஸ்டுகளின் 'ஆயுதப் போராட்டத்துக்கான' நியாயத்தை தமிழக மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள் என்றோ அதற்குப் பொருள் அல்ல. பெரியகுளம் சம்பவத்தையொட்டி மாவோயிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழு வெளியிட்டிருக்கும் அறிக்கையே இதற்குச் சான்று கூறுகிறது.

''மாவோயிஸ்டுகளின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் மறைத்து விட்டு அவர்களை வெறும் ஆயுத மோகம் கொண்ட தீவிரவாதிகளாகக் காட்ட ஊடகங்கள் முயற்சிக்கின்றன''... ''ஆயுதப் போராட்டத்திற்கான சிறிய தயாரிப்புகளையே பெரும் பயங்கரவாதமெனச் சித்தரித்துப் பயங்கரவாத பீதியை உருவாக்கி வருகிறது கருணாநிதி அரசு'' என்று கூறும் அந்த அறிக்கை, ''மாவோயிஸ்டுகள் யார், அவர்கள் ஏன் ஆயுதம் ஏந்துகிறார்கள்?'' என்று சுருக்கமாக விளக்குகிறது.

'மாவோயிஸ்டுகள் யார், அவர்களுடைய கொள்கை என்ன, அவர்கள் ஏன் ஆயுதம் ஏந்துகிறார்கள்' என்பதையே மக்களுக்கு விளக்கிப் புரிய வைக்க வேண்டும் என்ற நிலையில் இருக்கும் ஒரு அமைப்பு, ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கிவிட்டதாகக் கூறுவது சிறுபிள்ளைத்தனம் என்பதை விளக்கத் தேவையில்லை. தமிழகத்தில் கடந்த 7 ஆண்டுகளில் இவர்கள் சுற்றி வளைத்துக் கைது செய்யப்படுவது இது மூன்றாவது முறை.

பேருந்து எரிப்பு சம்பவத்தின் தொடர்ச்சியாக சனவரி, 2000-இல் தோழர் ரவீந்திரனை போலீசு காவலில் வைத்து சித்திரவதை செய்து சுட்டுக் கொன்று விட்டு, அதனை மோதல் கொலை என்று புளுகியது போலீசு. அது தி.மு.க. ஆட்சிக்காலம். பின்னர், நவம்பர், 2003-இல் தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டாரத்தில் 26 தோழர்கள் கைது செய்யப்பட்டு பொடாவில் சிறை வைக்கப்பட்டனர். தோழர் சிவா சுட்டுக் கொல்லப்பட்டார் - அது ஜெயலலிதா ஆட்சிக் காலம். இப்போது பெரியகுளம் சம்பவம்.

பெரியகுளத்தில் நடந்தது என்ன? என்பது பற்றி மாவோயிஸ்டு கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை எதுவும் கூறவில்லை. ஆனால், முன்னர் ரவீந்திரன் கொலை செய்யப்பட்டபோதும், ஊத்தங்கரையில் 26 பேர் சுற்றி வளைத்துக் கைது செய்யப்பட்டபோதும், மக்கள் ஆதரவு அடித்தளம் கூட இல்லாமல் ஆயுதக் குழுக்களைக் கட்டும் இவர்களுடைய சாகசவாதம் பற்றி நாம் விமரிசித்தோம். மாவோயிஸ்டுகள் கோபப்பட்டார்கள். தருமபுரி மாவட்டத்தில் ஏராளமான மக்களைத் திரட்டியிருப்பதாகவும், அம்மாவட்டம் ஒரு ஆயுதப்போராட்ட முனையாக உருவாகியிருப்பதாகவும் வலிந்து வாதாடினார்கள்.

தற்போது பெரியகுளம் பகுதி! இங்கே மாவோயிஸ்டு அமைப்பிற்கு மக்கள் மத்தியில் அரசியல் ரீதியான செல்வாக்கு ஏதும் இல்லை. அன்றைய சம்பவத்தில் இவர்களுக்கு ஆதரவு கொடுத்ததற்காக அந்த வட்டாரத்து மக்கள் யாரும் கைது செய்யப்பட்டதாகவும் செய்தி இல்லை.

''மலைத்தொடர்கள், காட்டுப் பகுதிகள், பாதுகாப்பான மறைவிடங்கள் கொண்ட , காட்டுப்பகுதிகளாக இருந்தால் போதும்; அங்கே ஆயுதக்குழுக்களைக் கட்டிவிடலாம், ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கிவிடலாம்'' என்று சிந்திக்கும் அளவுக்கு புவியியல்தான் இவர்களை வழிநடத்துகிறது; அரசியல் வழிநடத்துவதாகத் தெரியவில்லை. அரசியல் கண்ணோட்டம் ஏதுமற்ற இந்த அசட்டுத்தனமான நடவடிக்கையை இவர்கள் தம்முடைய சொந்த விவகாரமாகக் கருதிக் கொள்கிறார்கள். ''நாங்கள் போராடுகிறோம், நாங்கள் தியாகம் செய்கிறோம், உனக்

கென்ன நட்டம்?'' என்ற சாகச வாதிகளுக்கே உரித்தான மனோபாவம்தான் இவர்களுடைய சிந்தனையை வழிநடத்துகிறது.

''கம்யூனிஸ்டுகள் தம்முடைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் மக்களுக்கு விளக்கமளிக்கக் கடமைப்பட்டவர்கள்'' என்ற மிக எளிய உண்மை கூட, எதிரிகளின் அவதூறுப் பிரச்சாரம் தொடங்கிய பின்னர்தான் இலேசாக இவர்களுக்குப் புரியத் தொடங்குகிறது.



விசாரணை, தேடுதல் வேட்டை என்ற பெயரில் காடுகளிலும், மலைகளிலும் போலீசார் நடத்தி வரும் ''அவுட்டோர் ஷூட்டிங்.''

எனவேதான் ''மாவோயிஸ்டுகள் ஏன் ஆயுதம் ஏந்துகிறார்கள்?''. என்று தங்களுடைய அறிக்கையில் மக்களுக்கு விளக்கம் தருகிறார்கள். ''சிறப்புப் பொருளாதார மண்டலம், கோக், பெப்சி, ரிலையன்சு, குஜராத் படுகொலைகள்..'' என்று ஒரு நீண்ட பட்டியலைக் கூறி ''இத்தகைய பயங்கரவாதங்களை எதிர்த்து ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதம் ஏந்துவது பயங்கரவாதமல்ல. அத்தகைய மக்கள் புரட்சிக்குத் தலைமை ஏற்கவே மாவோயிஸ்டுகள் ஆயுதம் ஏந்துகிறார்கள்'' என்கிறது அவர்களது அறிக்கை.

மேற்கூறிய பிரச்சினைகளுக்காக ஏற்கெனவே மக்கள் புரட்சி நடந்து கொண்டிருக்கிறதாம்! அதற்கு இவர்கள் தலைமை தாங்குகிறார்களாம்! புரட்சிக்குத் தலைமை தாங்கும் கம்யூனிஸ்டுகள், புரட்சியில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்குத் 'தன்னிலை விளக்கம்' தந்து புரியு வைப்பதை நாம் இப்போதுதான் கேள்விப்படுகிறோம்.

சிறப்புப் பொருளாதார மண்டலமாக இருக்கட்டும், பிற தனியார்மய நடவடிக்கைகளாக இருக்கட்டும், அவற்றுக்கு எதிரான தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த அரசமைப்பின் வரம்புக்குள்ளேயே தத்தம் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பல்வேறு மக்கட்பிரிவினர் நடத்தும் இத்தகைய போராட்டங்கள் - அவை போர்க்குணமிக்கவையாக இருப்பினும் - பொருளாதாரப் போராட்டங்களே. மறுகாலனியாக்க எதிர்ப்பு என்ற அரசியல் கண்ணோட்டமோ, இந்த அரசமைப்பைத் தூக்கியெறிய வேண்டுமென்ற இலட்சியமோ அத்தகைய போராட்டங்களுக்கு இல்லை. அத்தகைய அரசியல் முழக்கங்களை முன்வைத்து மக்களைத் திரட்டுவதுதான் கம்யூனிஸ்டுகளின் கடமை. புரட்சிக்கு மக்களை அணிதிரட்டுவது என்பதன் பொருள் இதுதான். இப்படிப்பட்ட புரிதலோ, இவ்வாறு மக்களைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கையோ மாவோயிஸ்டுகளுக்கு இல்லை.

மாறாக, மக்களை அரசியல் படுத்த ஒரு விபரீதமான முறையைக் கடைப்பிடிக்கிறார்கள், மாவோயிஸ்டுகள். தத்தம் கோரிக்கைகளுக்காக மக்கள் போராடும்போது அவற்றில் கலந்து கொண்டு, அப்போராட்டங்களையே போலீசுடனான மோதலாக மாற்றினால், நிராயுதபாணிகளான மக்களோ போலீசின் அடக்குமுறையை எதிர்கொண்டு செய்வதறியாமல் திகைத்து நிற்பார்கள்; இப்படியாக 'அரசு என்பது அடக்குமுறைக் கருவி' என்ற உண்மையை மக்களுக்கு அனுபவபூர்வமாக புரிய வைத்து விடலாம் என்று நம்புகிறார்கள். இப்படியான செயல்கள் மூலம் அவர்கள் மத்தியிலிருந்து முன்னணியாளர்கள் சிலரைத் தமது 'ஆயுதக் குழுக்களுக்கு' வென்றெடுக்கிறார்கள். இதுதான் மக்களைப் புரட்சிக்கு அணிதிரட்ட மாவோயிஸ்டுகள் வகுத்திருக்கும் வழிமுறை.

சில சிறப்பான நிலைமைகளில் ஆந்திரம் மற்றும் தண்டகாரண்யாவின் பழங்குடி மக்கள் மத்தியில் தாங்கள் பெற்றிருக்கும் ஆதரவைக் காட்டி, அதனை மக்களின் ஆயுதப் போராட்டம் என்று சித்தரிக்கிறார்கள் மாவோயிஸ்டுகள். இதையே நாடு முழுவதற்கும் விரிவாக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

அந்த மக்கள் ஆதரவின் தன்மை என்ன? அது அரசியல் ரீதியான ஆதரவல்ல. ''நம்முடைய கோரிக்கைகளுக்காக நக்சல்பாரிகள் உயிரைக் கொடுக்கிறார்கள்'' என்ற அறவுணர்வின் அடிப்படையில் பழங்குடி மக்கள் வழங்கும் ஆதரவு. இத்தகைய ஆதரவு மக்களிடம் அரசியல் உணர்வை வளர்ப்பதில்லை. மாறாக, அதனை இல்லாமல் செய்து, மக்களை வெறும் பார்வையாளர்களாக்கி விடுகிறது.

சமீபத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிராக மாவோயிஸ்டுகள் அறிவித்த 'பந்த்'-இல் ஆந்திரத்தில் எவ்வித சம்பவமும் இல்லை என்கின்றன பத்திரிகைச் செய்திகள். சட்டிஸ்காரிலோ தொலைபேசி கோபுரம் தகர்ப்பு, மின் கோபுரம் தகர்ப்பு என்பன போன்ற சில இராணுவ நடவடிக்கைகள்தான் நடந்துள்ளன. மக்களின் அரசியல் உணர்வை அமைப்பாக்கிக் காட்டுகின்ற போராட்ட வடிவமான 'பந்த்' என்ற நடவடிக்கை, செயலூக்கமிக்க பங்கேற்பின் மூலம் அவர்களுடைய வர்க்க உணர்வை இன்னும் மேம்பட்ட தளத்துக்கு உயர்த்த வேண்டிய ஒரு அரசியல் நடவடிக்கை, அதன் பொருளை இழந்து ஆளும் வர்க்கத்துக்கு 'தொந்திரவு தரும் நடவடிக்கையாக'ச் சுருங்கிவிட்டதை நாம் காண்கிறோம்.

ஆந்திரத்தில் தங்கள் அமைப்பிற்குப் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக ஒப்புக் கொள்கிறார் மாவோயிஸ்டு கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர், தோழர் சோனு. (பீப்பிள்ஸ் மார்ச், ஜூலை, 2007) ஆனால், இந்தப் பின்னடைவு குறித்தும்கூட அவர்கள் இராணுவ ரீதியாகப் பரிசீலிக்கிறார்களேயன்றி, அரசியல்ரீதியாகப் பரிசீலிப்பதில்லை.

www.padippakam.com

''அங்கே மாவோயிஸ்டுகள் ஏற்கெனவே நிலைநாட்டியிருப்பதாகக் கூறிக் கொள்ளும் 'மக்கள் அதிகாரத்தைப்' பாதுகாத்துக் கொள்ள மக்கள் போராடுகிறார்களா? ராஜசேகர் ரெட்டி அரசுடன் பேச்சுவார்த்தை நடந்தபோது இலட்சக்கணக்கில் திரண்ட மக்கள், பேச்சு வார்த்தையின்போதே போலி மோதல் கொலைகளை அரசு தொடங்கியபோது, அதனை எதிர்த்து அவ்வாறு மக்கள் அணிதிரளாதது ஏன்? மாவோயிஸ்டுகளின் செல்வாக்கு மிகுந்த ஆந்திரத்துக்கு, கடுமையான மக்கள் எதிர்ப்புகள் இன்றி புஷ் விஜயம் செய்ய முடிவது எப்படி? சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஆந்திரம் முன்னிலை வகிப்பதும், நாயுடுவைக் காட்டிலும் தீவிரமாகப் புதிய தாராளவாதக் கொள்கைகளை ரெட்டி அமல்படுத்த முடிவதும், இவற்றுக்கெல்லாம் எதிராக நந்திக்கிராமுடன் ஒப்பிடத்தக்க வகையிலான மக்கள் போராட்டங்கள் எதுவும் ஆந்திரத்தில் நடைபெறாமல் இருப்பதும் ஏன்?'' என்பன போன்ற கேள்விகளை அவர்கள் பரிசீலனைக்கே எடுத்துக் கொள்வதில்லை.

''அடக்குமுறை இருப்பதால் மக்கள் திரளவில்லை, இல்லையென்றால் மக்கள் திரளுவார்கள்'' என்ற எளிய சூத்திரத்தைச் சொல்லி ஆறுதல் அடைந்து கொள்கின்றனர். வரலாறு நெடுகிலும் நடந்திருக்கின்ற மக்களின் அரசியல் ரீதியான எழுச்சிகளோ, நம் கண் முன்னே காஷ்மீரிலும், மணிப்பூரிலும் ஏன், நந்திக்கிராமிலும் அடக்குமுறைகளை மீறிக் கிளர்ந்தெழும் மக்கள் எழுச்சிகளோ கூட (அவை வேறு யார் தலைமையிலானவையாக இருந்தாலும்) மாவோயிஸ்டுகளுடைய கண்களைத் திறக்கவில்லை. ஏனெனில், அவர்களுடைய சுத்த இராணுவக் கண்ணோட்டம், மக்களின் அரசியல் முன்முயற்சி பற்றிக் கவலைப்படுவதில்லை. 'தமது ஆயுத நடவடிக்கைகளுக்கு உதவுவது' என்ற கோணத்தில் மட்டுமே, மக்களின் ஆதரவு குறித்துக் கவலைப்படுகிறார்கள்.

''மாவோயிஸ்டுகளின் கொள்கைகளை மறைத்து விட்டு அவர்களை வெறும் ஆயுத மோகம் கொண்ட தீவிரவாதிகளாகக் காட்ட ஊடகங்கள் முயல்கின்றன'' என்று மாவோயிஸ்டு தமிழ் மாநிலக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது. ஊடகங்கள் அவதூறு செய்வது இருக்கட்டும், உண்மை நிலவரமென்ன? ''ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதுதான் ஒரு அமைப்பை புரட்சிகர அமைப்பு என்று மதிப்பிடுவதற்கான முன் நிபந்தனை'' என்று மாவோயிஸ்டு அமைப்பினர் கொண்டிருக்கும் கருத்துக்கும், சிறுபிள்ளைத்தனமான பெரியகுளம் ஆயுதப் போராட்டத் தயாரிப்புக்கும் வேறென்ன பொருள்? 'புரட்சிகர அரசியலின் பௌதிக வடிவமே துப்பாக்கிதான்' என்று கருதும் சிந்தனைதானே இதில் வெளிப்படுகிறது!



நக்சல்பாரிகள் பற்றி பொதுமக்களிடம் பீதியை ஏற்படுத்துவதற்காகவே, மதுரை புறநகர் பகுதியில் வீடுவீடாகச் சென்று போலீசார் நடத்திய விசாரணை.

''அரசியல் போராட்டத்தின் முதிர்ந்த வடிவம்தான் ஆயுதப் போராட்டம் என்பதையும், 'அரசியல் போராட்ட அனுபவத்தினூடாக ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை மக்கள் உணரச் செய்ய வேண்டும்'' என்று நாம் கூறுவதையும் மாவோயிஸ்டு அமைப்பினர் ஏளனத்துடன் மறுக்கிறார்கள். ''மக்கள் ஆயுதப் போராட்டத்துக்குத் தயாராகத்தான் இருக்கிறார்கள். சும்மா எத்தனை நாள் பேசிக்கொண்டே இருக்க முடியும்? நாம்தான் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்க வேண்டும்'' என்று அரசியலையே வீர வசனமாகச் சுருக்குகிறார்கள்.

மக்களைப் புரட்சிக்கு அணியமாக்குவதும், தலைமை தாங்குவதும்தான் கம்யூனிஸ்டுகளுக்குரிய பணியே அன்றி, மக்களின் சார்பாகப் புரட்சி செய்வதல்ல. புரட்சி என்பது ஆளும் வர்க்கங்களுடன் புரட்சியாளர்கள் 'ஒண்டிக்கு ஒண்டி' நடத்தும் சண்டையும் அல்ல. ஆனால், மக்களுக்கு விடுதலையை 'வழங்கப் பொறுப்பேற்றிருக்கும்' இடது சாகசவாதம் இப்படித்தான் கருதிக் கொள்கிறது.

வலது சந்தர்ப்பவாதிகளான போலி கம்யூனிஸ்டுகள் புரட்சிக்கு இழைக்கும் துரோகம் எளிதில் அம்பலமாகிவிடுகிறது. ஆனால், இடது சாகசவாதமும் புரட்சிக்கு இழப்பைத்தான் ஏற்படுத்துகிறது என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. சிறையையும் சித்திரவதையையும் சந்திக்கும் அந்தத் தோழர்களின் தனிப்பட்ட இழப்பாக மட்டுமே இது புரிந்து கொள்ளப்படுகிறது.

''பயங்கரவாதப் படையான அதிரடிப்படையை அனுப்புவதன் மூலம் மாவோயிஸ்டு புரட்சியாளர்களை மட்டுமல்ல, இச்சமூக அமைப்பை எதிர்த்துப் போராடும் அனைவரையும் மிரட்ட முயற்சிக்கிறார் கருணாநிதி'' என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது, மாவோயிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழு.

உண்மைதான். ஆளும் வர்க்கத்தின் அடியாட்படையான அரசு எந்திரமும் அதிரடிப்படையும் மக்கள் அனைவரின் பொது எதிரி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், அந்த எதிரிப்படை தன்னை நாயகனாகச் சித்தரித்துக்கொள்ளவும், தன்னுடைய பயங்கரவாத நடவடிக்கைகளை நியாயப்படுத்திக் கொள்ளவும், புரட்சியாளர்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவும் மாவோயிஸ்டுகளின் இந்த நடவடிக்கை எதிரிக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இது புரட்சிக்கு ஏற்படும் இழப்பு என்பதை இனிமேலாவது அவர்கள் புரிந்து கொள்ளப் போகிறார்களா என்பதுதான் கேள்வி.

— ஆசிரியர் குழு

www.padippakam.com

# திருச்சி போலீசின் கொட்டடிக் கொலை! புகார் கொடுத்தவர் மீதே பொய் வழக்கு!

ஆட்டோ திருட்டு தொடர்பாக விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட திருச்சி - உறையூர் ஆட்டுக்காரத் தெருவைச் சேர்ந்த செல்வம் என்பவர், போலீசாரால் சித்திரவதை செய்து அடித்துக் கொல்லப்பட்ட பயங்கரத்தைக் கண்டு திருச்சி நகரமே அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது.

உறையூரைச் சேர்ந்த செந்தில் என்பவர், தனது ஆட்டோ காணாமல் போனது பற்றி உறையூர் போலீசு நிலையத்தில் 30.6.07 அன்று ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத் தலைவர் தோழர் செல்வராசுவின் உதவியுடன் புகார் கொடுத்தார். புகாரைப் பெற்றுக் கொண்ட போலீசார் ரசீது தரவில்லை; எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், அவ்வப்போது சிறு சிறு திருட்டுகளில் ஈடுபட்டிருந்த 'முன்னாள் ஆட்டோ ஓட்டுநரான செல்வம் என்பவர் மீது சந்தேகம் ஏற்பட, தோழர் செல்வராசும் செந்திலும் அவரிடம் விசாரித்தபோது, அவர் ஆட்டோ திருடியதாக ஒப்புக் கொண்டு, ஆட்டோவைத் தராமல் அலைக்கழித்தார். பின்னர், செல்வராசுவும் செந்திலும் செல்வத்தை உறையூர் போலீசாரிடம் 6.7.07 அன்று ஒப்படைத்து, விசாரணை செய்து ஆட்டோவை மீட்டுத் தருமாறு கோரினர்.

சிறு திருட்டு என்றாலும் கொடூரமாகச் சித்திரவதை செய்யும் போலீசு, திருட்டில் கிடைத்த ஆதாயத்தில் தமக்குரிய பங்கைக் கேட்டு செல்வத்தை மிருகத்தனமாகத் தாக்கியது. குற்றம் சாட்டப்பட்டவரை 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டிய சட்டபூர்வ நடைமுறையை மீறி, உறையூர் போலீசார் 3 நாட்கள் செல்வத்தைத் தனியே அடைத்து வைத்து கொடூரமாக வதைத்தனர். 7-ஆம் தேதி அன்று உறையூர் ஸ்டார் மேன்ஷனிலும் அடுத்த இரு நாட்களாக பாபுரோடு, சிறீரங்கம், பாலக்கரை முதலான இடங்களிலும் வைத்து காட்டுமிராண்டித்தனமாக அவரை அடித்து நொறுக்கியதால் 9.7.07 அன்று செல்வம் மரணமடைந்தார்.

இப்படுகொலையை மூடி மறைக்க பிணத்தை எங்காவது வீசி விடலாம் என்றும் அதற்கு ஒத்துழைக்குமாறும் தலைமைக் காவலரான மருதைராஜ், ஆ.ஓ.பா. சங்கத் தலைவர் செல்வராசிடம் கேட்டுள்ளார். அதிர்ச்சியடைந்த செல்வராசு இதற்கு உடன்பட மறுத்து, மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்கறிஞர்களின் உதவியோடு போலீசு உயர் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், போலீசு நடத்திய இப்படுகொலையை மூடிமறைக்க ஒத்துழைக்காத 'குற்ற'த்திற்காக ஆ.ஓ.பா. சங்கத் தலைவர் செல்வராசை முதன்மைக் குற்றவாளியாகவும் புகார் கொடுத்து செந்திலை இரண்டாவது குற்றவாளியாகவும் கொலைகாரப் போலீசு பொய்வழக்கைச் சோடித்து, அதற்கேற்ப திகில் சினிமா கதை பாணியில் ஒரு கட்டுக் கதையையும் நாளேடுகளில் செய்தியாக வெளியிட்டது. பின்னர், அவசர கோலத்தில் செய்த தகிடுதத்தங்களை மூடி மறைக்க முடியாமல் மருதைராஜ், செல்வராஜ் ஆகிய போலீசுக்காரர்களை பெயருக்கு 6-வது குற்றவாளிகளாகச் சேர்த்துள்ளது. கொலைவெறியாட்டத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ள செந்தில், பாலாஜி மற்றும் ஆய்வாளர் வெங்கடாசலம் ஆகியோரை வழக்கிலேயே இணைக்கவில்லை. தொடக்கத்திலேயே இவ்வளவு மோசடிகளைச் செய்யும் திருச்சி போலீசு, வழக்கின் போக்கில் இன்னும் எவ்வளவு தில்லுமுல்லு-மோசடிகளைச் செய்யும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. சட்டம் என் கையில், நீதி என் பையில் என்று கொக்கரிக்கும் போலீசின் ஆணவத்துக்கும் அடக்குமுறைக்கும் இதைவிட வேறு சான்றும் தேவையில்லை.

உறையூர் போலீசின் கொட்டடிக் கொலைக்கெதிராகக் கொதித்தெழுந்த ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கம், ஓட்டல் தொழிலாளர் சங்கம், மனித உரிமைப் பாதுகாப்பு மையம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து, கொலைகார போலீசைக் கைது செய்யக் கோரி நகரெங்கும் விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டன. அதன் தொடர்ச்சியாக 12.7.07 அன்று ஊர்வலமாகச் சென்று திருச்சி மாவட்ட நீதிபதியிடமும் 16.7.07 அன்று மாவட்ட ஆட்சியரிடமும் உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி மனுத் தாக்கல் செய்தன. 17.7.07 அன்று புத்தூர் நாலுரோட்டில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் தலைமையில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியுள்ளன. கொலைகார போலீசாரைத் தண்டிக்கவும், பொய் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஆட்டோ ஓட்டுநர்களை விடுவிக்கவும், கொலை செய்யப்பட்ட செல்வத்தின் குடும்பத்திற்கு உரிய நட்டஈடு கோரியும் இவ்வமைப்புகள் தொடர்ந்து போராடி வருகின்றன.

-பு.ஜ. செய்தியாளர்

**கொலைக்கார போலீசு குற்றவாளிகளை கைது செய்யக் கோரி மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நடத்திய ஆர்ப்பாட்டம்.**



www.padippakam.com

# அடுத்தத் தேர்தலில் ஆட்சி: பச்சோந்தி இராமதாசின் பகல் கனவு!

ஓட்டுக்கட்சி அரசியல் தலைவர்களும் மாயத் தோற்றங்களைக் காட்டி மக்களை ஏய்க்கிறார்கள். சினிமாக்காரர்களும் இதே வேலையைத்தான் செய்கிறார்கள். இரண்டு வகையினரும் கள்ளப் பணத்தை - கருப்புப் பணத்தைக் குவிப்பதற்குத்தான் இதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் ஒரு நல்ல வேடிக்கை என்னவென்றால், மற்றவர்களை ஏய்ப்பதற்காக இவர்கள் தங்களைப் பற்றி ஏற்படுத்தி வைத்திருக்கும் மாயத்தோற்றத்தைப் பல சமயம் உண்மையானதென்று இவர்களே நம்பி ஏமாந்து விடுவதுண்டு. இதனால் சினிமாவில் கதாநாயகர்களாகத் தோன்றுபவர்கள் நிஜத்தில் ''காமெடியன்''களாகி விடுகிறார்கள். அரசியலில் தலைவர்களாக பாவனை செய்பவர்கள் நிஜத்தில் பிழைப்புவாத - கழிசடைகளாக, மக்களிடம் நகைப்புக்குரிய கோமாளிகளாகி விடுகிறார்கள்.

அதே சமயம், சினிமாக்காரர்களுக்குக் கொஞ்சமாவது சொந்த முதலீடு தேவை; வட்டிக்காவது பணம் வாங்கி கோடிக்கணக்கில் மூலதனம் போட்டுத் தொழில் செய்கிறார்கள். ஆனால், ஓட்டுக் கட்சி அரசியல் தலைவர்களோ வெறும் சவடாலையே மூலதனமாகப் போட்டு தொழில் செய்கிறார்கள், இல்லை, ''அரசியல் பண்ணுகிறார்கள்.''

இப்படி வெறும் சவடாலை மட்டுமே மூலதனமாகப் போட்டு குறுகிய காலத்தில் பல கோடி ரூபாய் அள்ளி விட்ட சமீபகாலத் திடீர் அரசியல்வாதிகளுள் முன்னிலையில் நிற்பவர் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் இராமதாசு. மருத்துவத் தொழிலை விட அரசியல் தொழிலில் குறுகிய காலத்தில் பல மடங்கு சம்பாதித்து விட்ட இராமதாசு, இந்த வளர்ச்சி கண்டு தானே பிரமித்துப் போய்விட்டார்போலும். அரசியலிலும் இதேபோன்ற கிடுகிடு வளர்ச்சி அடைந்துவிடலாம் என்று கனவுக்கோட்டை கட்டுகிறார். பத்தாண்டுகளுக்கு முன்பே புதுச்சேரியில் ஆட்சியைப் பிடித்துவிடப் போவதாக இலக்கு வைத்துக் கூட்டணி பேரங்கள் நடத்திக் குப்புற விழுந்தார். இருந்தாலும், இராமதாசு தனது எதிர்பார்ப்பையும் சவடாலையும் விடுவதாக இல்லை.

இரண்டு வன்னிய இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட ''பசுமைத் தாயகம்'' என்ற அரசு சாரா நிறுவனத்தைக் கைப்பற்றிக் கொண்ட இராமதாசு, முதலில் அன்புமணியை அதன் தலைவராகப் புகுத்தினார். அன்புமணி மைய அமைச்சரான பிறகு, மருமகள் சவுமியாவைத் (படத்தில் மரம் நடுபவர்) தலைவராக்கினார். அவர் குடும்பத்திற்குப் ''பசுமைத் தாயகம்'' பல வகைகளிலும் ''பணம் காய்க்கும்'' சோலையாக உள்ளது.



தனித்துப் போட்டியிட்டால், ஒன்று அல்லது இரண்டு தொகுதிகளுக்கு மேல் இதுவரை பா.ம.க. வெற்றி பெறவில்லை. வன்னியர் பெரும்பான்மையாக வாழும் தொகுதிகளில்கூட அக்கட்சி தோல்வி அடைவதுதான் வழக்கமாக உள்ளது. தேர்தலுக்குத் தேர்தல் பா.ம.க. பெறும் வாக்குகளின் சதவீதம் குறைந்து கொண்டே போகிறது. ஐந்து சதவீதம் என்ற அளவில்தான் அக்கட்சி இதுவரை வாக்குகளைப் பெற முடிந்திருக்கிறது. கடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் பா.ம.கவுக்கு என்று சில நகராட்சி மற்றும் உள்ளூராட்சிகளில் தலைவர் பதவிகளைப் பெறுமளவுக்கு பெரும்பான்மை வட்டங்கள் (வார்டுகள்) கூட்டணிக் கட்சிகளால் ஒதுக்கப்பட்டன. ஆனால், ஒதுக்கிய இடங்களில் பெரும்பான்மை பெற முடியாமல்,



இராமதாசு முன்னிலையில் நடக்கும் பெட்டி தரும் வீதி நாடகம்: சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் கல்விக் கொள்ளையை எள்ளி நகையாடும் விதமாக வெறும் அடையாளப் போராட்டங்களை நடத்தும் பா.ம.க., தனது இளைஞர் அணி மாநாட்டிற்கு கல்விக் கொள்ளையர்களின் தலைவன் ஜேப்பியாரிடமிருந்தே இலட்சக்கணக்கில் நிதியும், பேருந்து வசதியும் பெற்றது.

தலைவர் பதவியைப் பிடிக்க முடியாமற் போனது. பா.ம.க.வைவிடக் கூடுதலான இடங்களில் வெற்றிபெற்ற கூட்டணிக் கட்சிகள் தலைவர் பதவியைப் பிடித்தபோது, துரோகமிழைத்து விட்டதாக ஆத்திரத்தில் வெடித்தார் இராமதாசு.

தற்போது பா.ம.க.வுக்கு மத்தியில் 4 எம்.பி.கள், 2 மந்திரிகள், மாநிலத்தில் 18 எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். "லாட்டரி" குலுக்கலில் பரிசு விழுந்ததும்; அது ஏதோ தனது நல்வினைப் பயனால் விளைந்தது என்று ஒருவன் மிதப்பில் திளைப்பதைப் போல, பா.ம.க. தலைமைக்கு பிரமை தட்டிப் போயிருக்கிறது. தற்போது பா.ம.க.விற்கு வாய்த்திருக்கும் பதவிகள் எல்லாம் அக்கட்சிக்கு மக்கள் மத்தியில் நிலவும் உண்மையான ஆதரவைக் காட்டுவதாக இராமதாசு நம்பச் சொல்கிறார்.

ஓட்டுக்கட்சி அரசியல் ஒட்டுமொத்தமாகத் திவாலாகிப் போன சூழலில் பல அரசியல் அனாமதேயங்கள் கூட உயர் பதவிக்கு வந்துவிட முடிகிறது. வாழப்பாடி ராமமூர்த்தியும் சுப்பிரமணிய சுவாமியும் மத்திய அமைச்சர்களாகி விட்டார்கள்; சந்திரசேகர், ஐ.கே. குஜ்ரால், தேவ கவுடா போன்றவர்கள் பிரதமர்களாகி விட்டார்கள். அப்துல் கலாம் அரசுத் தலைவராகி விட்டார். கருணாநிதிக்கும் ஜெயலலிதாவிற்கும், அதிகரித்து வரும் தோல்வி பயம்; காங்கிரசுக்கும் பா.ஜ.க.வுக்கும் இருக்கும் எப்படியாவது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றுவிடும் பதவி ஆசை ஆகியவற்றை வைத்து, தக்க சமயங்கள் பார்த்து மாறி மாறி கூட்டுக்களும் பேரங்களும் நடத்திக் கூடுதலான தொகுதிகளைப் பெற்று, கூட்டணிக் கட்சிகளின் தயவில் பா.ம.க. தனது உண்மையான மக்கள் ஆதரவுக்கு மீறிய இடங்களைச் சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பெற முடிகிறது.

இந்த நிலையை அடையும் வழியில் இராமதாசு ஒரு அரசியல் பச்சோந்தி என்றும் பா.ம.க. ஒரு கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதக் கட்சி என்றும் பெயரெடுத்துள்ளார்கள். பொதுமக்கள் மட்டுமல்ல, சந்தர்ப்பவாத அரசியல் சகதியில் மூழ்கிக் கிடக்கும் கூட்டணி அரசியல் கட்சிகளே கூட, பா.ம.க. இராமதாசு நம்பிக்கைக்கு உகந்தவர் அல்லர் என்றே கருதுகின்றனர். இதை இராமதாசே ஒப்புக் கொண்டு, "எங்களது ஆதரவை எல்லா விஷயங்களிலும் எதிர்பார்க்கும் கூட்டணிக் கட்சிகள் விஷயம் என்று வந்தால் எட்டி நின்று வேடிக்கை பார்ப்பது வழக்கமாகி விட்டது" ஆத்திரமாக வெடிக்கிறார்.

கூட்டணிக் கட்சிகளுக்கும் பா.ம.க-வுக்கும் உள்ள உறவு இத்தகையதுதான் என்று நன்கு தெரிந்தும், "வருங்காலத்தில் கூட்டணி ஆட்சிதான் அமையும் என்றுதான் சொல்ல வேண்டும். 2011-இல் அப்படி அமையும் கூட்டணி ஆட்சியில் பா.ம.க. பங்குபெறும்" என்றும் அடித்துச் சொல்கிறார். அதேசமயம், 2011-இல் தமிழகத்தில் தனித்து ஆட்சியைப் பிடிப்பது தான் இலக்கு; எங்கள் கனவு என்று தனது கட்சி கூட்டத்தில் பேசுகிறார். இனி தேசிய அளவிலும் சரி, மாநில அளவிலும் கூட்டணி ஆட்சிதான் என்று ஒருபுறம் மதிப்பீடு செய்து விட்டு, பா.ம.க.வே தனித்து ஆட்சியைப் பிடிப்பதுதான் தமது இலக்கு, கனவு என்று பகல் கனவு காண்பதுதான் ஒரு அரசியல் தலைமைக்கு அழகா? அறிவா?

பா.ம.க இராமதாசைப் பொறுத்தவரை சந்தர்ப்பவாதக் கூட்டணி, சந்தர்ப்பவாதக் கூட்டணி அரசில் பங்கேற்பது என்பதுதான் இலக்கு, கனவு. மற்றபடி இலட்சியம், கொள்கை என்பதெல்லாம் கிடையாது. இதிலிருந்தே தெரியவில்லையா? பதவிதான் முக்கியம்; ஜெயலலிதா-பா.ஜ.க.-ஆர்.எஸ்.எஸ். கூட்டணி அரசானாலும் சரிதான்; கருணாநிதி-காங்கிரசு-கம்யூனிஸ்டு கூட்டணி அரசானாலும் சரிதான். எதிலும் பங்கேற்க பா.ம.க. தயார். மக்கள் நலன், பொறுப்புடன் இயங்கும் அரசியல் இயக்கம் என்பதெல்லாம் வெறும் சவடால்தான்! இதை ஏற்கெனவே நிரூபித்து விட்டார்; வெற்றிக் கூட்டணி என்பதுதான் எல்லாவற்றுக்கும் அடிப்படை என்று புதிய அரசியல் இலக்கணத்தை உருவாக்கியவர் அல்லவா இராமதாசு!

காங்கிரசு, பா.ஜ.க. ஆகிய இரு தேசியக் கட்சிகளும் சரி, கருணாநிதி, ஜெயலலிதா ஆகியவர்களின் மாநிலக் கட்சிகளும் சரி தனித்து ஆட்சியைப் பிடிக்கும் சக்தியை இழந்துவிட்டன; இனி பா.ம.க.வுக்குத்தான் மக்கள் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்று இராமதாசு நம்பச் சொல்கிறார். ஆனால், இதே அரசியல் தர்க்கவாதம் புரியும் நடிகர் விஜயகாந்த் கட்சியோ கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் அடுத்து மூன்றாவது இடத்தைப் பிடிப்பதில் பா.ம.க.வை முந்திக் கொண்டு முன்னேறுகின்றது. காங்கிரசும், வைகோ கட்சியும் கூட பா.ம.க.வை விடக் கூடுதலான வாக்கு சதவீதத்தைப்

### பிழைத்திருத்தம்

ஜூலை 2007 இதழின் தலையங்கத்தில், ஜெகஜீவன் ராம் குடியரசு தலைவர் பதவி வகித்தார் என்று பொருள் தரும் வகையில் தவறாக எழுதப்பட்டுள்ளது. எமது கவனக்குறைவால் நேர்ந்து விட்ட இத்தவறுக்கு வருந்தி சுயவிமர்சனம் ஏற்கிறோம்.

— ஆசிரியர் குழு.

பெற்று வருவதை தேர்தல் முடிவுகள் தெளிவாகக் காட்டி வருகின்றன. இராமதாசின் அரசியல் ஆருடங்களை அரசியல் முட்டாள்கள் கூட நம்பமாட்டார்கள். ஆனால், பகலோ, இரவோ கனவு காணும் உரிமையை யார் மறுக்க முடியும், தடுக்க முடியும்!

''ஆண்ட, ஆளும் தேசிய மற்றும் மாநிலக் கட்சிகள் மக்களின் செல்வாக்கை இழந்து வருகின்றன; மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். பா.ம.க.வை ஒரு ஜாதிக் கட்சி என்று மக்கள் நினைக்கவில்லை. ஒரு நல்ல பொறுப்புள்ள அரசியல் கட்சியாகவே மக்கள் நம்புகிறார்கள். தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் பா.ம.க.வுக்கு உறுப்பினர்களும் கிளைகளும் உள்ளன; அதன் வளர்ச்சியை மக்கள் வரவேற்கிறார்கள். எப்போதும் எந்தவொரு மக்கள் பிரச்சினையானாலும் பா.ம.க. மட்டும்தான் போராடுகிறது; எந்தவொரு பிரச்சினையானாலும் அதில் பா.ம.க.வின் கருத்தை மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு அதன் செயல்பாடுகள் இருக்கின்றன. இதை அங்கீகரிக்க மறுத்து ஊடகங்கள் தாம் பா.ம.க.வுக்கு ஜாதி முத்திரை குத்தி, அதன் வளர்ச்சியைத் தடுப்பதிலேயே முனைப்பாக உள்ளன'' என்று அடுக்கடுக்காக புளுகித் தள்ளுகிறார், இராமதாசு.

எப்படியாவது தி.மு.க. கூட்டணியை உடைத்துவிட வேண்டும் என்று கங்கணங்கட்டிக் கொண்டுள்ள ஜெயலலிதா-பா.ஜ.க. ஆதரவு பார்ப்பனச் செய்தி ஊடகங்களும், பிழைப்புக்காக பரபரப்புச் செய்திகளைத் தேடி அலையும் ஊடகங்களும்தாம் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன; அவை இராமதாசின் அறிக்கை அரசியலுக்கும், வெறும் அடையாளப் போராட்டங்களுக்கும் அளவுக்கு மீறியே முக்கியத்துவம் கொடுத்துப் பரப்பி வருகின்றன என்பதுதான் உண்மை.

சிறப்புப் பொருளாதார மண்டலம், விமான நிலையம் விரிவாக்கம், துணை நகரங்கள் அமைப்பு, முல்லைப் பெரியாறு - காவிரி - பாலாறு விவகாரங்கள், தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் கொள்ளை, சில்லறை வணிகத்தில் ஏகபோக - பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவு போன்றவற்றை பல்வேறு ஜனநாயக, புரட்சிகர அமைப்புகளும் கையிலெடுத்துப் போராடி வருகின்றன. இவையெல்லாம் பா.ம.க. பங்கேற்கும் ஆளும் கூட்டணி அரசுகளின் தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கக் கொள்கையின் நேரடி விளைவுதான். இராமதாசின் அன்புமணி மத்திய அமைச்சகத்தில் உட்கார்ந்து கொண்டு பன்னாட்டு மருந்து கம்பெனிகளுக்கும், பெப்சி-கோக்குக்கும் பல்லக்குத் தூக்கியதைப் போல, மேற்படி பிரச்சினைகளில் மன்மோகன் சிங் - மாண்டேக் சிங் அலுவாலியா - சிதம்பரம் கும்பலுக்கு எல்லா வகையிலும் துணை போகிறார். இந்த உண்மைகளையெல்லாம் இருட்டடிப்பு செய்து பா.ம.க. ராமதாசின் அறிக்கைகளையும் அடையாளப் போராட்டங்களையும் செய்தி ஊடகங்கள் ஊதிப் பெருக்குகின்றன. ஊடகங்களுக்கு கவர் கொடுத்தே ''கவர்'' பண்ணும் பா.ம.க. இராமதாசு, மற்ற இயக்கங்களின் கொள்கைகள், முழக்கங்களைத் திருடி முற்போக்கு நாடகமாடி ஏய்ப்பதையே ஆரம்பம் முதல் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அரசியல் கொள்கைகள், முழக்கங்கள், போராட்டங்கள் சந்தர்ப்பவாத கூட்டணி சேர்க்கைகளில் மட்டுமல்ல, சொந்த வாழ்க்கையிலும் பா.ம.க. இராமதாசு நம்பத் தகுந்தவர் அல்ல என்று வன்னிய மக்கள் பலருக்கும் நன்கு தெரியும். ''என் சொந்தக் காசை வைத்துத்தான் இயக்க வேலை செய்வேன்; அமைப்பிடமிருந்து ஒரு சல்லிக்காசு கூட வாங்க மாட்டேன். நானோ எனது குடும்பத்தினரோ எந்தவொரு பதவியையும் ஏற்க மாட்டோம்; அப்படிச் செய்தால் என் கையை வெட்டுங்கள்'' என்றெல்லாம் ஆரம்ப காலத்தில் சவடாலடித்த இராமதாசு, தனது மகன், மனைவி, மருமகள், பேத்தியைக் கூட கட்சி மற்றும் துணை அமைப்புகளின் பொறுப்புகளில் இருத்திக் கொண்டார். இலஞ்ச ஊழல் செய்து கருப்புப் பணம் - கள்ளப் பணத்தைக் குவிப்பதில் வாழப்பாடி இராமமூர்த்தியோடு அவர் பங்காளிச் சண்டை போட்டு நாடே நாறியது. கருணாநிதி, ஜெயலலிதா கட்சிகளைப் பல பிரச்சினைகளிலும் விமர்சனம் செய்தபோதும், அவர்களது குடும்ப அரசியலை மட்டும் கண்டு கொள்ளாமல் இருக்கிறாரே, ஏன்? பா.ம.க.வே இராமதாசின் குடும்ப அரசியல் நலனுக்காகத்தான் நடத்தப்படுகிறது; அதற்காகத்தான் அவரது வன்னிய சொந்தகளாகிய தீரன் போன்றவர்கள் கூடத் தூக்கியெறியப்பட்டார்கள் என்பதை இன்னும் பா.ம.க.வில் உள்ள பிழைப்புவாதிகள் தவிர, அனைவரும் அறிவர்!

● ஆர்.கே.

## நெருப்பைப் பொட்டலம் கட்ட முடியுமா? புரட்சிகர அமைப்புகளைப் பொய் வழக்கால் ஒடுக்க முடியுமா?

ஈராண்டுகளுக்கு முன்பு ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து, தாமிரவருணியை உறிஞ்ச வரும் அமெரிக்க கோக்-கை எதிர்த்து நெல்லையில் நடத்திய மறியல் போராட்டத்தையொட்டி, தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி சந்தைப் பகுதியில் சுவரெழுத்து விளம்பரம் செய்த வி.வி.மு.வைச் சேர்ந்த 4 தோழர்கள் தருமபுரி-அதியமான் கோட்டை போலீசாரால் 24.6.05 அன்று கைது செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

''சுப்ரீம் கோர்ட்டு, ஐகோர்ட்டு டவாலி; அப்துல் கலாம் அரசவைக் கோமாளி; சட்டமன்றம், நாடாளுமன்றம் ஏமாற்று; நக்சல்பாரியே ஒரே மாற்று'' என்று சுவரில் எழுதியதுதான் அவர்கள் செய்த 'குற்றம்'. இதற்காக, அரசைக் கவிழ்க்கச் சதி, நாசவேலையில் ஈடுபட சதித் திட்டம் என்றெல்லாம் இட்டுக் கட்டி, கொடிய கிரிமினல் சட்டப் பிரிவுகளின்படி தருமபுரி போலீசு இத்தோழர்கள் மீது பொய்வழக்கு சோடித்தது. கீழமை நீதிமன்றங்களில் பிணை மறுக்கப்பட்டு, 56 நாட்களுக்குப் பிறகு சென்னை உயர்நீதி மன்றம் நிபந்தனையுடன் பிணை வழங்கியது. வி.வி.மு.வின் செயல்பாடுகளை முடக்கி ஒடுக்கத் துடித்த தருமபுரி நகர போலீசு, இவ்வழக்கினை விரைவு நீதிமன்றத்தில் தொடுத்து வெகு விரைவில் தண்டனை கொடுக்க எத்தணித்தது.

ஈராண்டுகளாக நடந்த வழக்கு விசாரணையில் வி.வி.மு. தோழர்கள் நால்வர் மீதும் குற்றம் புரிந்ததற்கான எந்த ஆதாரத்தையும் போலீசாரால் காட்ட முடியவில்லை. தோழர்கள் சார்பில் வாதாடிய மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர் பாலசுப்ரமணியத்தின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் போலீசு கும்பல் திக்குமுக்காடியது. இறுதியில், இது வி.வி.மு.வினர் மீது வேண்டுமென்றே புனையப்பட்ட பொய்வழக்கு என்று தீர்ப்பளித்து விரைவு நீதிமன்றம் 18.6.07 அன்று தோழர்களை விடுதலை செய்துள்ளது. பயங்கரவாதப் பீதியூட்டி, தருமபுரி மாவட்டத்தில் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரத்தைக் கூட ஒடுக்கத் துடிக்கும் போலீசின் முகத்தில் இத்தீர்ப்பு கரியைப் பூசியுள்ளது.

– விவசாயிகள் விடுதலை முன்னணி,
பென்னாகரம் வட்டம்.

www.padippakam.com

# அமெரிக்க அணு ஆயுதப் போர்க்கப்பல் "நிமிட்ஸ்"-ஐ விரட்டியடிப்போம்!

## — கண்டன ஆர்ப்பாட்டம்

நாடு மீண்டும் காலனியாக்கப்படும் நிலையில், அமெரிக்க உலக மேலாதிக்கப் போர்த் தேரில் இந்தியாவைப் பிணைக்கும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, அமெரிக்க அணு ஆயுதப் போர்க்கப்பலான நிமிட்ஸ், கடந்த ஜூலை முதல் வாரத்தில் சென்னைத் துறைமுகத்துக்கு வந்ததை எதிர்த்தும், இக்கப்பலை இந்திய கடற்பகுதியில் உலாவ அனுமதிக்கும் துரோக ஆட்சியாளர்களை எதிர்த்தும் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின.




ஏற்கெனவே அணுசக்தி ஒப்பந்தம் என்ற பெயரில் அமெரிக்க அடிமைச் சாசனத்தில் கையெழுத்திட்டுள்ள இந்திய அரசு, இப்போது "கூட்டுச்சேரா இயக்கத்திலிருந்து விலகி அமெரிக்காவுடன் நெருங்கி வரவேண்டும்" என்று அமெரிக்க அரசுச் செயலர் கண்டலீசா ரைஸ் விடுத்த எச்சரிக்கைக்கு விசுவாசமாகப் பணிந்து இப்போர்க்கப்பலை அனுமதித்துள்ளது. அண்மை ஆண்டுகளில் இதேபோல் 5 அமெரிக்கப் போர்க் கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களுக்கு வந்து இந்தியக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சிகள் நடத்தியுள்ளன.

இந்த உண்மைகளுடன், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடி வரும் ஈராக் மக்களைக் கொன்றொழித்த இப்போர்க் கப்பலை அனுமதிப்பதென்பது நாட்டுக்கே அவமானம் என்று விளக்கி, கடந்த ஜூலை 2-ஆம் நாளன்று சென்னை மெமோரியல் ஹால் அருகே காலை 10 மணியளவில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமையேற்ற தோழர் சுப.தங்கராசு, போராட அறைகூவினார்.

ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை நெஞ்சிலேந்தி விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், திரளாக வந்த உழைக்கும் மக்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

- பு.ஜ. செய்தியாளர்கள்

# "வெற்று கவர்ச்சிகர அறிவிப்புகளை நிராகரிப்போம்! கல்வி தனியார்மயமாவதைத் தடுக்கப் போராடுவோம்!"

## — பு.மா.இ.மு.வின் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

கல்லூரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் இரத்து, தொழிற்கல்விக்கான நுழைவுத் தேர்வு இரத்து, "ஷிப்டு" முறை கல்லூரி, இலவச பஸ் பாஸ் - என அடுக்கடுக்கான அறிவிப்புகளை தி.மு.க. அரசு வெளியிட்டுள்ளதோடு, உயர்கல்வி அமைச்சர் சுயநிதிக் கல்லூரிகளுக்கு எதிராக வீர வசனமும் பேசி வருகிறார்.

ஆனால், கல்விக் கட்டணம் இரத்து என்பதே வடிகட்டிய பொய். ரூ. 100 முதல் ரூ. 200 வரையிலான தொகைதான் குறைக்கப்பட்டுள்ளதே தவிர, மொத்தக் கல்விக் கட்டணமும் இரத்து செய்யப்படவில்லை. தமிழகத்திலுள்ள 67 அரசுக் கல்லூரிகளில் 2500 பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை; 10-க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் முதல்வர்களே கிடையாது. "ஷிப்டு" முறையைச் செயல்படுத்த மேலும் 4000 பேராசிரியர்களை நியமித்தாக வேண்டும். அது பற்றி எந்த அறிவிப்பும் இல்லை. பஸ் பாஸ் அறிவிப்பானது, சட்டமன்றம் எழுப்பிய கரவொலியோடு கரைந்து விட்டது. மருத்துவக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களிடம் ரூ. 3 இலட்சம் வரை வசூலித்துக் கொள்ள தாராள அனுமதி தரப்பட்டுள்ளது. காசு உள்ளவனுக்கே கல்வி எனும் புது மனு நீதியைச் செயல்படுத்திவரும் சிறுபான்மையினர் கல்லூரிகளும் தனியார் கல்லூரிகளும் நீதிமன்றத்தில் அரசின் உத்தரவுகளுக்கு எதிராகத் தடையாணை பெற்றுக் கொக்கரிக்கின்றன.




தஞ்சையில்

கல்வியைக் கடைச்சரக்காக்கி, தனியார் கல்விக் கொள்ளையருக்குக் கதவை அகலத் திறந்து விட்டுள்ள தி.மு.க. அரசை எதிர்த்தும், தனது கையாலாகாத்தனத்தை மறைத்துக் கொண்டு கவர்ச்சி அறிவிப்புகளை வெளியிட்டு ஏய்க்கும் அரசின் பித்தலாட்டத்தைத் திரைகிழித்தும், தனியார்மயம் எனும் மறுகாலனியாக்கக் கொள்கைக்கு எதிராகப் போராட மாணவர்கள் - பெற்றோர்களை அறைகூவியும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி தமிழகமெங்கும் விரிவான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக, 29.6.07 அன்று தஞ்சையில் ரயிலடி அருகிலும் 18.7.07 அன்று சென்னையில் மெமோரியல் ஹால் அருகிலும், 24.7.07 அன்று திருச்சியில் பாலக்கரை-பிரபாத் திரையரங்கம் அருகிலும் திரளான மாணவர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்களின் பங்கேற்போடு எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டங்களின் தாக்கத்தால் உந்தப்பட்ட சென்னை-நந்தனம் கலைக் கல்லூரி மாணவர்கள், பஸ் பாஸ், ஷிப்டு முறை நேர மாற்றம் உள்ளிட்டு பல கோரிக்கைகளை முன்வைத்து, பு.மா.இ.மு.வின் வழிகாட்டுதலில் 19.7.07 அன்று வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தி முதற்கட்ட வெற்றியைச் சாதித்துள்ளனர்.

பு.மா.இ.மு.வின் ஆர்ப்பாட்டங்களும் அதைத் தொடர்ந்து நடந்த போராட்டமும் மாணவர்கள் மத்தியில் இவ்வமைப்பின் மீது புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

- பு.ஜ. செய்தியாளர்கள்

www.padippakam.com

# பாலஸ்தீனப் பிளவும் அமெரிக்கச் சதியும்

பாலஸ்தீன மக்கள் நடத்திவரும் சுயநிர்ணய உரிமைப் போர், மேலும் ஒரு பின்னடைவுக்கு உள்ளாகியிருக்கிறது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் (பி.எல்.ஓ.) ஓர் அங்கமான ஃபதா இயக்கத்திற்கும், முசுலீம் அடிப்படைவாத அமைப்பான ஹமாஸ் இயக்கத்திற்கும் இடையே கடந்த ஓராண்டு காலமாக நடந்து வந்த பதவி - அதிகாரச் சண்டை, உள்நாட்டுப் போராக மாறக் கூடிய சூழல் உருவாகி இருப்பதுதான் இப்பின்னடைவுக்கான காரணம்.

பத்தாண்டுகளுக்கு முன்பாக, ஆஸ்லோ ஒப்பந்தம் என்ற பெயரில் ஓர் 'அமைதி' ஒப்பந்தத்தை, அமெரிக்க ஏகாதிபத்தியம் பாலஸ்தீன மக்கள் மீது திணித்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், தற்பொழுது பாலஸ்தீன பகுதிகளாக ஏற்றுக் கொள்ளப்படும் மேற்குக் கரையையும், காசா முனையையும் நிர்வகிப்பதற்காக, பாலஸ்தீன ஆணையம் என்ற பெயரில் ஓர் அதிகார - நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டது.

சுதந்திர பாலஸ்தீன அரசு உருவாகப் போவதன் தொடக்கப்புள்ளி என வருணிக்கப்பட்ட இந்த பாலஸ்தீன ஆணையம், நடைமுறையில், அமெரிக்க-இசுரேல் ஆக்கிரமிப்பாளர்களின் ஏஜெண்டாகத்தான் செயல்பட்டு வருகிறது. ஒரு முனிசிபாலிடிக்கு இருக்க வேண்டிய சுய அதிகாரம் கூட இல்லாத இந்த பாலஸ்தீன ஆணையத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக ஃபதாவிற்கும், ஹமாஸுக்கும் இடையே நடந்துவரும் இந்த நாய்ச் சண்டையின் காரணமாக, இன்று பாலஸ்தீனப் பிராந்தியம் இரண்டாகப் பிளவுபட்டுப் போய்விட்டது.

மேற்குக் கரையை ஃபதா இயக்கமும், காசாமுனையை ஹமாஸ் இயக்கமும் 'தங்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டதன் மூலம், ஒரு உள்நாட்டுப் போரைச் சந்திக்க வேண்டிய அபாயத்தில் பாலஸ்தீன மக்களைத் தள்ளிவிட்டுள்ளன. அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகி நடைமுறைக்கு வந்த பிறகுதான், பாலஸ்தீனத்தில் அமெரிக்க - இசுரேல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக இரண்டாவது இண்டிஃபதா (சுதந்திரப் போர்) நடந்தது. அதனால், இந்தப் பிளவை, ஏகாதிபத்தியவாதிகள் மிகுந்த உற்சாகத்தோடு வரவேற்கின்றனர்.

2005-ஆம் ஆண்டு இறுதியில், பாலஸ்தீன ஆணையத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற்ற பொழுதே, இந்தப் பிளவிற்கான விதை தூவப்பட்டது. அத்தேர்தலில் அமெரிக்க - இசுரேல் கூட்டணி ஃபதா இயக்கத்தையும், அதன் தலைவரான முகம்மது அப்பாஸையும் ஆதரித்தது. ஆனால், அவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக, அத்தேர்தலில் ஹமாஸ் இயக்கம் வெற்றி பெற்றது. பாலஸ்தீன ஆணையத்தின் அதிபராக முகம்மது அப்பாஸும், ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த இஸ்மாயில் ஹனியா பிரதமராகவும் இருக்கும் எதிரும், புதிருமான நிலையை 2005 தேர்தல் உருவாக்கியது. பாலஸ்தீன ஆணையத்தின் பெரும்பான்மை ஹமாஸிடம் இருந்த பொழுதும், அதிகார வர்க்கப் பதவிகளில் ஃபதா இயக்கத்தினர் நிரம்பியிருந்தனர்.

''ஹமாஸின் தேர்தல் வெற்றியை ஏற்றுக் கொள்ள முடியாது'' என அறிவித்த அமெரிக்கா, தனது தலையாட்டி பொம்மையான அதிபர் முகம்மது அப்பாஸ் மூலம், ஹமாஸ் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட முயன்றது. மேலும் ஐரோப்பிய யூனியன் நாடுகளை தன்னுடன் இணைத்துக் கொண்டு, பாலஸ்தீனத்துக்குத் தர வேண்டிய நிதி உதவிகளைத் தராமல் முடக்கி வைத்தது. அமெரிக்காவைத் தொடர்ந்து இசுரேலும், பாலஸ்தீன ஆணையத்தின் சார்பாக வசூலித்த வரிப் பணத்தைத் தராமல் முடக்கியது.

இப்பொருளாதார நெருக்கடியின் காரணமாக, ''பாலஸ்தீன மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் கூட கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஏறத்தாழ 1,60,000 அரசு ஊழியர்களுக்குப் பல மாதங்களுக்குச் சம்பளம் தர முடியாமல் போனது. மேற்குக் கரையிலும், காசா முனையிலும் 12 இலட்சம் பாலஸ்தீன மக்கள் பட்டினிச் சாவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டனர்'' என ஐ.நா. மன்றமே ஒப்புக் கொள்ளும் அளவிற்கு, பாலஸ்தீனத்தில் அன்றாட வாழ்க்கை மோசமடைந்தது. இன்னொருபுறமோ, இப்பொருளாதார நெருக்கடி முற்ற, முற்ற ஃபதாவிற்கும் ஹமாஸுக்கும் இடையேயான மோதலும் அதிகரித்தது.

ஹமாஸோடு நேரடியாக மோதி, அவ்வமைப்பை நிர்மூலமாக்கும் திட்டத்தோடு ஃபதா இயக்கத்தைச் சேர்ந்த 500 பேருக்கு ஆயுதப் பயிற்சியும், உதவியும் அளித்து, எகிப்தின் வழியாக காசா முனைக்கு அமெரிக்கா அனுப்பி வைத்தது; அதிபர் அப்பாஸின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த சிறப்பு அதிரடிப் படைக்கும் அமெரிக்காவால் 160 கோடி ரூபாய் அளவிற்கு ஆயுத உதவிகள் வழங்கப்பட்டு, இந்தச் சகோதரச் சண்டை கொம்பு சீவிவிடப்பட்டது.


இசுரேலோ, தனது இராணுவச் சிப்பாய் ஒருவரை ஹமாஸ் இயக்கம் கடத்தி விட்டது எனக் குற்றஞ்சுமத்தி, ஹமாஸ் அமைப்பின் தலைமையிடம் இருக்கும் காசா முனைப் பகுதி மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. ஹமாஸ் இயக்கத்தின் தலைவரும் பாலஸ்தீன ஆணையத்தின் பிரதமருமான இஸ்மாயில் ஹனியா உள்ளிட்டு, ஹமாஸ் இயக்கத்தின் அமைச்சர்களையும், ஆணைய உறுப்பினர்களையும் குறிவைத்துத் தாக்கிக் கொல்லப் போவதாக அறிவித்ததோடு, அவர்களின் மீது ''ராக்கெட்'' தாக்குதல்களையும் நடத்தியது.

இப்பொருளாதார நெருக்கடியும், இராணுவ முற்றுகையும் பாலஸ்தீனத்தில் ஏற்படுத்திய விளைவுகளால், தங்கள் நாடுகளும் பாதிக்கப்படுமோ எனப் பயந்து போன சௌதி அரேபியா உள்ளிட்ட சில அரபு நாடுகள் ஃப்தாவிற்கும், ஹமாஸிற்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்த, ''மெக்கா ஒப்பந்தத்தை'' உருவாக்கின. இதன்படி, சில முக்கிய அமைச்சர் பதவிகளை, ஹமாஸ் இயக்கம் ஃபதாவிற்கு விட்டுக் கொடுப்பது என்றும், அதற்கு ஈடாக, ஹமாஸின் ஆயுதப் படையைப் பாலஸ்தீன ஆணையத்தின் படையோடு இணைத்துக் கொள்வது என்றும் இதன் அடிப்படையில் தேசிய ஐக்கிய அரசை அமைப்பது என்றும் முடிவானது.


படிப்பகம்

www.padippakam.com

ஆனால் இந்த ஒப்பந்தத்தை அமெரிக்கா விரும்பாததால், அதிபர் முகம்மது அப்பாஸ் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த மறுத்துவிட்டார். மேலும், பாலஸ்தீன ஆணையத்திற்குப் புதிதாகத் தேர்தல் நடத்தப் போவதாகவும் அறிவித்தார். இதனால், பதவி-அதிகாரத்துக்காக நடந்த இந்தச் சண்டை முற்றி, மேற்குக் கரையை ஃபதா இயக்கமும், காசா முனையை ஹமாஸ் இயக்கமும் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டு விட்டன.



காசாமுனை மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் காயமடைந்த பச்சிளம் குழந்தை.

ஃபதாவிற்கும், ஹமாஸுக்கும் இடையே மோதல் நடந்து வந்தபொழுது, ''இந்த வன்முறையை நாங்கள் வரவேற்கிறோம்'' என வெளிப்படையாக அறிவித்த அமெரிக்கா, இப்பொழுது, ''நாம் இரண்டு விதமான பாலஸ்தீனத்தை எதிர்கொள்கிறோம்; ஃபதாவின் மேற்குக் கரைக்கு தேவையான உதவிகளைச் செய்வது; ஹமாஸின் காசா முனையைக் கசக்கிப் பிழிவது'' என்ற திட்டத்தைச் செயல்படுத்தப் போவதாகக் கொக்கரிக்கிறது.

''அமைதி'' ''சமாதானம்'' என்ற பெயரில் தனது அமெரிக்க அடிவருடித் தனத்தை மூடி மறைத்துவந்த ஃபதா இயக்கம், இப்பொழுது அம்மணமாக நிற்கிறது. இந்தப் பிளவுக்குப் பிறகு, அதிபர் அப்பாஸ், ஹமாஸ் அரசைக் கலைத்துவிட்டதோடு, அமெரிக்காவின் விருப்பப்படி உலக வங்கியின் முன்னாள் ஊழியரான சலாம் ஃபய்யத்தை பாலஸ்தீன ஆணையத்தின் பிரதமராகவும்; அமெரிக்காவின் சி.ஐ.ஏ.வால் பயிற்சி அளிக்கப்பட்ட முகம்மது தஹ்லானைப் பாதுகாப்பு ஆலோசகராகவும் நியமித்திருக்கிறார்.

''இது, காசா முனையின் இரண்டாவது விடுதலை'' என ஹமாஸ் தனது வெற்றியைப் பீற்றிக் கொண்டாலும், இந்த இரண்டாவது விடுதலையைத் தக்க வைத்துக் கொள்ளும் அளவிற்கு அதனிடம் அரசியல் திட்டமோ, சமூக ஆதரவோ கிடையாது. தனது வெளியுலகத் தொடர்புக்கு மட்டுமல்ல, தண்ணீர், மின்சாரம், எரிசக்தி, வேலைவாய்ப்பு, வர்த்தகம், மருத்துவ வசதிகள் போன்ற அனைத்து அத்தியாவசியத் தேவைகளுக்கும் இசுரேலின் தயவை நாடியே காசாமுனை இருக்கிறது.

ஏறத்தாழ 14 இலட்சம் பாலஸ்தீனர்கள் தஞ்சம் அடைந்திருக்கும் காசா முனை மிகப் பெரிய அகதிகள் முகமாகத்தான் இருந்து வருகிறது. அங்கு வசிப்போரில் 80 சதவீதத்திற்கும் மேலான மக்கள் வேலை வாய்ப்பு அற்றவர்களாக, வறுமையோடு உழன்று வருகின்றனர். இவர்களை மேலும், மேலும் கசக்கிப் பிழிவதன் மூலம் ஹமாஸை அடக்கிவிட முடியும் என்பதுதான் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டம்.

மேலும், ஈராக் ஆக்கிரமிப்புக்குப் பிறகு மேற்காசிய நாடுகளைத் தனது மேலாதிக்க நோக்கங்களுக்கு ஏற்ப மறுவார்ப்பு செய்யும் திட்டத்தோடு அமெரிக்கா இயங்கி வருகிறது. இப்பொழுது, அதிகாரப் போட்டியால் பாலஸ்தீனத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு, அமெரிக்காவைப் பொறுத்தவரை, பழம் நழுவி பாலில் விழுந்த கதையைப் போன்றதாகும். ஈராக்கை, சன்னி, ஷியா, குர்து என மூன்று பகுதிகளாகக் கூறு போடும் அமெரிக்காவின் சதி, அங்கு முழுமையாக வெற்றி பெறாவிட்டாலும், பாலஸ்தீனத்தில் வெற்றி பெற்றுள்ளது.

அமெரிக்க - இசுரேல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகத் தாக்குதல்களை ஹமாஸ் இயக்கம் நடத்தி வந்தாலும், அதனின் நடைமுறை நோக்கம், தனது ஆயுதப் படைகளை, பாலஸ்தீன ஆணையத்தின் படைகளோடு இணைத்து ''அதிகாரத்தைப்'' பங்கு போட்டுக் கொள்ள வேண்டும் என்பது தவிர வேறில்லை. இதனால்தான், ஆஸ்லோ ஒப்பந்தத்தைப் புறக்கணிப்பதாக கூறிவந்த ஹமாஸ், பின்னர் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாலஸ்தீன ஆணையம், பொதுத் தேர்தல் ஆகியவற்றில் பங்கு பெறும் சமரச நிலையை மேற்கொண்டது.

மேலும், ஏகாதிபத்திய அடிவருடித் தனம், ஊழல், கோஷ்டி சண்டையால் ஃபதா இயக்கம் சீரழிந்து போய்விட்டதால்தான், ஹமாஸ் இயக்கத்திற்கு பாலஸ்தீன மக்கள் வாக்களித்தார்களேயன்றி, அதனுடைய மத அடிப்படைவாத கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு ஹமாஸுக்கு வெற்றியை அளிக்கவில்லை. எனவே, காசா முனையில் ஹமாஸ் அடைந்திருக்கும் ''வெற்றியை'' நீண்ட நாட்களுக்குத் தக்க வைத்துக் கொள்ள முடியாது. ஃபதா இயக்கத்தோடு சமரசம் செய்து கொள்வது; இல்லையென்றால், அமெரிக்க - இசுரேல் கூட்டணியின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பின்வாங்கிச் செல்வது என்பதுதான் இந்த ''வெற்றி''யின் எதிர்கால முடிவாக இருக்கும்.

• செல்வம்


படிப்பகம்

### சட்டங்கள், ஆணையங்கள், நடுவர்மன்றங்கள், திட்டங்கள்...

# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

**இந்தியாவின் மத்திய, மாநில ஆட்சியாளர்கள் அடுக்கடுக்கான பல சமூக நீதிச் சலுகைகளும், சமூக நலத் திட்டங்களும், மக்கள் உரிமைச் சட்டங்களும் கொண்டு வந்து நிறைவேற்றுவதாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் எதனால் கொண்டு வரப்படுகின்றன, இவை எந்த அளவு நிறைவேற்றப்படுகின்றன, இவற்றால் என்னென்ன பயன்கள் விளைந்திருக்கின்றன என்று அலசும் தொடரின் பத்தாம் பகுதி.**

**தா**ழ்த்தப்பட்ட சாதியினர் - பழங்குடியினர் மீதான (வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் 1989-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அதன்பிறகு நாடு முழுவதும் இம்மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து இழைக்கப்படும் வன்கொடுமைச் சம்பவங்களில் மிகமிக முக்கியமானவற்றையும் வகைமாதிரிகளையும் பின்வருமாறு தொகுக்க முடியும்.

### தமிழ்நாடு

- தூத்துக்குடி மாவட்டம், கொடியங்குளம்; ஆகஸ்டு, 1995. பள்ளர் எனப்படும் தேவேந்திர குல வேளாளர் வாழும் இக்கிராமத்துக்குள் புகுந்த அறுநூறுக்கும் மேற்பட்ட போலீசார் அம்மக்களைத் தாக்கி வன்முறை வெறியாட்டம் நடத்தி, சூறையாடினர். அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மறவர்களாகிய ஆதிக்க சாதியினர் மீதான தாக்குதல்களுக்குக் கொடியங்குளம் தாழ்த்தப்பட்ட சாதியின் வசதி படைத்தவர்கள்தாம் காரணம் என்றும் அவர்கள் பயங்கர ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருப்பதாகவும் கூறி இத்தாக்குதல் கொலை வெறியாட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் மாவட்டங்களில் பல இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக அற்பக் காரணங்கள் கூறி மறவர், நாய்க்கர், நாடார் முதலிய ஆதிக்க சாதியினர் கொலைவெறித் தாக்குதல்களை நடத்தினர்.

- மதுரை மாவட்டம், மேலவளவு, ஜூன், 1997. வெளியூர் சென்று விட்டு ஊர் திரும்பிக் கொண்டிருந்த மேலவளவு உள்ளூராட்சித் தலைவர் முருகேசனும் மற்றும் நான்கு தாழ்த்தப்பட்டவர்களும் முக்குலத்தோர் என்ற ஆதிக்க சாதிக் கொலைவெறிக் கும்பலால் பேருந்தை வழிமறித்து பட்டப்பகலில் ஓடஓட விரட்டி வெட்டிக் கொல்லப்பட்டனர். தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மேலவளவு உள்ளூராட்சித் தலைவர் தேர்தலில் ஆதிக்க சாதி எதிர்ப்பை மீறிப் போட்டியிட்டு, தலைவரானதற்குப் பழிதீர்க்கவே இந்தப் படுகொலை நடந்தது.

- திருநெல்வேலி மாவட்டம், ஜூலை, 1999. நெல்லையில், மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நடத்திய பேரணி மீது போலீசார் நடத்திய மிருகத்தனமான தாக்குதல் காரணமாக 11 தாழ்த்தப்பட்டவர்கள் உட்பட 17 பேர் தாமிரபரணி ஆற்றில் மூழ்கி மாண்டு போனார்கள்.

- தருமபுரி மாவட்டம், 2001-ஆம் ஆண்டு: அரூர் அருகே உள்ள வாச்சாத்தி கிராமத்துக்குள் புகுந்த இருநூறுக்கும் மேற்பட்ட போலீசு மற்றும் காட்டிலாகா காவலர்கள் பழங்குடியினப் பெண்கள் மீது பாலின வன்முறை ஏவி வெறியாட்டம் போட்டனர். சந்தனமரக் கடத்தலில் அக்கிராம மக்கள் ஈடுபட்டிருப்பதாக அத்தாக்குதலுக்குப் பொய்க் காரணம் கூறப்பட்டது.

- கடலூர் மாவட்டம், புதுக்கூரைப் பேட்டை கிராமம், ஜூலை, 2003-ஆம் ஆண்டு. பொறியியல் படித்த தாழ்த்தப்பட்ட இளைஞனும், வன்னிய சாதி பெண்ணும் காதலித்த ''குற்றத்திற்காக'' ஆதிக்க சாதிக் கும்பலால் மரத்தில் கட்டிவைத்து உற்றார் உறவினர் முன்னிலையில் வாயில் நஞ்சு ஊற்றிக் கொன்று எரிக்கப்பட்டனர். இக்கொடூரச் செயலில் தாழ்த்தப்பட்ட உறவினரே பங்கேற்றதாக வழக்கைப் புனைந்து சாதிவெறியர்களைத் தப்புவிக்கும் வேலையில் சி.பி.ஐ.யே ஈடுபட்டிருக்கிறது.

### ஆந்திரப் பிரதேசம்

- குண்டூர் மாவட்டம், ஆகஸ்டு, 1991-ஆம் ஆண்டு, சுண்டூர் கிராமம். ரெட்டி மற்றும் கப்பு ஆகிய ஆதிக்க சாதியினரால் எட்டு தாழ்த்தப்பட்டவர்கள் கண்ட துண்டமாக வெட்டப்பட்டு, கோணிப் பையிலே திணிக்கப்பட்டு, சாக்கடையில் வீசப்பட்டனர். 16 ஆண்டுகளாகியும் குற்றவாளிகள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை.

- பிரகாசம் மாவட்டம், ஜூலை 1985, கரம்சேடு கிராமம். தாழ்த்தப்பட்ட மக்கள் குடிநீருக்காகப் பயன்படுத்தும் குளத்தில் ஒரு ஆதிக்க சாதிக்காரன் எருமை மாட்டைக் குளிப்பாட்டியதை ஒரு பெண் ஆட்சேபித்ததற்காக கம்மா நாயுடு சாதிக்காரர்கள் கூடி ஒரு பெண்ணை பாலியல் வன்முறை செய்ததோடு, ஐந்து தாழ்த்தப்பட்டவரை துரத்தித் துரத்தி வெட்டிக் கொன்றனர். இந்த வழக்கில் 5 பேருக்கு ஆயுளும், 47 பேருக்கு பல்வேறு ஆண்டுகளும் சிறைத்தண்

தலை துண்டிக்கப்பட்ட மேலவளவு பஞ்சாயத்துத் தலைவர் முருகேசனின் சடலத்தின் மீது விழுந்து கதறியழும் அவரது மனைவி. (கோப்புப் படம்)



www.padippakam.com

டனை விதித்தது அமர்வு நீதிமன்றம். மேல் முறையீட்டு வழக்கை விசாரித்த உயர்நீதி மன்றம் குற்றஞ் சாட்டப்பட்ட 150 பேரையும் விடுதலை செய்தது.

● குண்டூர் மாவட்டம், ஜூலை, 1987, நீருகொண்டா கிராமம். கம்மா நாயுடுகளின் வீட்டு முன்பு தாழ்த்தப்பட்ட மக்கள் திருமண ஊர்வலம் சென்றதற்காக ஆதிக்க சாதியினர் நடத்திய தாக்குதலில் ஒரு தாழ்த்தப்பட்டவர் கொல்லப்பட்டதோடு மேலும் 15 பேர் படுகாயமுற்றனர்.



ஆதிக்க சாதி வெறியர்களால் சிறுநீர் குடிக்க வைக்கப்பட்ட கவுண்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சங்கன் (இடது ஓரம்); மலம் தின்ன வைக்கப்பட்ட திண்ணியம் கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் (நடுவில்) மற்றும் ராமசாமி. (கோப்புப் படம்)

**கர்நாடகா**

● கோலார் மாவட்டம், கம்பலப்பள்ளி கிராமம், மார்ச், 2000. ஏழு தாழ்த்தப்பட்டோர் இரண்டு சிறிய குடிசைகளில் தள்ளிப் பூட்டப்பட்டு, உயிரோடு கொளுத்தப்பட்டனர். தாழ்த்தப்பட்டோர் அமைப்பாக திரளுவதன் காரணமாக வளர்ந்து வந்த பகைதான் இந்தக் கொலைவெறிச் செயலுக்குக் காரணம் என்றபோதும், ஒரு ரெட்டி சாதி தண்ணீர்க்காரனைக் கொன்றதாகப் பழிபோட்டு, ரெட்டிகள் கூடிச் செய்திருக்கின்றனர். கொலைக் குற்றவாளிகள் அனைவரும் கடந்த ஆண்டு இறுதியில் விடுதலை செய்யப்பட்டனர்.

● பெல்லாரி மாவட்டம், வன்னேனூர், ஆகஸ்டு, 2001. யெரம்மா என்ற தாழ்த்தப்பட்ட கூலி விவசாயப் பெண் வால்மீகி சாதியினரால் அவர் வீட்டிலிருந்து வெளியே இழுத்து வரப்பட்டு, நிர்வாணப்படுத்தி, அடித்து கிராமத் தெருவில் ஊர்வலமாக நடத்திச் செல்லப்பட்டார். தாழ்த்தப்பட்ட பையனுக்கும் வால்மீகிப் பெண்ணுக்கும் இடையிலான காதலுக்கு அவர் உடந்தையாய் இருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். ஊர் மந்தையிலுள்ள மரத்தில் அவரைக் கட்டிப் போட்டு அடித்தனர்.

● பிஜாப்பூர் மாவட்டம், கடாகோல் கிராமம், ஜூலை, 2006. கிராமக் குளத்தில் குடிதண்ணீர் எடுத்ததற்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக, குறிப்பாக கூலி விவசாயிகளுக்கு எதிராக ஆதிக்க சாதியினர் சமூகப் புறக்கணிப்பு விதித்தனர். அந்தக் குளத்தில் துணிகளைத் துவைத்தும், கால்நடைகளைக் குளிப்பாட்டியும், மனிதக் கழிவுகளைக் கொட்டியும் ஆதிக்க சாதியினர் நாசப்படுத்தினர். அவர்கள் தங்கள் நிலங்களிலும், வீடுகளிலும் தாழ்த்தப்பட்டோருக்கு வேலை அளிக்க மறுத்ததோடு, இவர்கள் அரசுக் கடைகளில் இருந்து பொருட்கள் வாங்குவதையும் தடுத்தனர். மூன்று மாதங்கள் நீடித்த இந்தச் சமூக ஒதுக்கலை ஆதிக்க சாதியினர் கடைப்பிடித்தனர். மாவட்ட ஆட்சியினர் தலையிட்டு பஞ்சாயத்து செய்த பின்னரே விலக்கிக் கொண்டனர்.

**மராட்டியம்**

● நான்டெட் மாவட்டம், நவம்பர் 1993. கௌதம் வாக்மரே என்ற தாழ்த்தப்பட்ட இளைஞர் தீக்குளித்து இறந்து போனார். 1978-ஆம் ஆண்டு மராட்டிய சட்டப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகிய மரத்வாடா பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்டுவதை காங்கிரசின் மராத்தா சாதி தலைவர்களும், சிவசேனாவும், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களும் எதிர்த்ததைத் தொடர்ந்து, பல ஆண்டுகளாகத் தள்ளிப் போடப்படுவதைக் கண்டித்துத்தான் அந்த இளைஞர் தீக்குளித்தார். அதைத் தொடர்ந்து, வட மராட்டியத்தின் பல மாவட்டங்களிலும் ஆதிக்க சாதியினரால் தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

● மும்பை, ராம்பாய் நகர், ஜூலை, 1997-ஆம் ஆண்டு. அங்குள்ள அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை போட்டு அவமரியாதை செய்யப்பட்டதைக் கண்டு ராம்பாய் நகர் குடிசைப் பகுதியில் திரண்ட தாழ்த்தப்பட்ட மக்கள் காலை ஏழு மணிக்கு நெடுஞ்சாலையில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அங்கு நிறுத்தப்பட்டிருந்த சிறப்பு ரிசர்வ் படை, நிராயுதபாணிகளான தாழ்த்தப்பட்ட மக்கள் மீது வேண்டுமென்றே துப்பாக்கிச் சூடு நடத்தி 10 பேரைப் படுகொலை செய்தது. ஒரு சொகுசுப் பேருந்தைப் போராட்டக்காரர்கள் எரித்ததைச் சாக்கு வைத்து கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியும் தடியடி நடத்தியும் பலரைப் படுகாயமுறச் செய்தது, போலீசுப்படை. பின்னர் அமைக்கப்பட்ட விசாரணைக் கமிசன், போலீசு துணை ஆணையாளர் கதம் என்பவர் நியாயமின்றி, தேவையின்றி, வேண்டுமென்றே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக குற்றஞ்சாட்டியது. ஆனால், 10 ஆண்டுகளாகியும், அந்த அதிகாரிக்கு எதிராக வழக்கு நடத்தப்படவில்லை; பதவி உயர்வுதான் பெற்றுள்ளார்.

● நாக்பூர், நவம்பர், 1994-ஆம் ஆண்டு. நாக்பூரில் கூடிய சட்டமன்றக் கூட்டத்தின்போது, "கோண்ட் கோவரி" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை "கோண்ட், கோவரி" என்று திருத்தும்படி கோரிக்கை மனுக் கொடுக்கப் போன, மலைவாழ் மக்கள் பேரணி மீது போலீசு கட்டவிழ்த்து விட்ட காட்டுமிராண்டித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 200-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

● நாக்பூர் மாவட்டம், கையர்லாஞ்சி கிராமம். 'செப்டம்பர் 2006-ஆம் ஆண்டு. தாழ்த்தப்பட்ட சாதிச் சிறு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தாயும் பதின்வயது மகளும் நிர்வாணமாக்கப்பட்டு அடித்து இழுத்து வரப்பட்டு கிராமத் திடலில் ஆதிக்க சாதி ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் முன்னிலையில் கும்பலாக வன்புணர்ச்சி செய்து கொல்லப்பட்டனர். அப்பெண்கள் பிணமான பின்னும் வன்புணர்ச்சி செய்து பிறப்பு உறுப்புக்களை கம்புகளால் குத்திக் கிழித்தனர். அக்குடும்பத்தின் இரு இளைஞர்களைத் தம் தாயோடும் சகோதரியோடும் வன்

www.padippakam.com

புணர்ச்சி செய்யும்படி கொடுமைப்படுத்தினர். அவர்கள் மறுக்கவே அவர்களின் ஆண் உறுப்புகளை கல்லால் அடித்து நசுக்கிக் கொல்லப்பட்டனர். நால்வரின் உடல்களும் . கால்வாய்களில் வீசப்பட்டன. சம்பவத்துக்கு போலீசு உடந்தையாக இருந்ததோடு குற்றவாளிகளைக் காக்கவே முயன்று வருகிறது.



மும்பய் - ராம்பாய் நகர் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள். (கோப்புப் படம்)

**பீகார்**

● போஜ்பூர் மாவட்டம், பதானி தோலா, ஜூலை, 1996. ரன்வீர் சேனா எனப்படும் பூமிகார் ஆதிக்க சாதித் தனிப்படையினால் 19 தாழ்த்தப்பட்ட மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மா-லெ) தலைமையில் அணிதிரண்டு, ஆதிக்க சாதியினரின் நிலவெளியேற்றத்துக்கு எதிராகப் போராடியதற்காக இந்தப் படுகொலைகள் நடந்தன. இதைத் தொடர்ந்து மேலும் பல கிராமங்களில் இம்மாதிரியான தொடர் படுகொலைகள் நடந்தன.

● ஜெகனாபாத் மாவட்டம், லக்கிம்பூர் பாதே கிராமம், டிசம்பர் 1997. பீகாரின் வரலாற்றில் நடந்த மிகப் பெரிய படுகொலைச் சம்பவம். ரன்வீர் சேனா வெறியர்களால் 16 குழந்தைகள் உட்பட 63 தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை கொல்லப்பட்டனர். அவர்களில் ஐந்து பதின்வயது பெண்கள் பாலியல் வன்முறை செய்து சுட்டுக் கொல்லப்பட்டனர். மூன்று மாதத்திற்குப் பிறகு 250 ரன்வீர் சேனா குண்டர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருந்தாலும் பத்தாண்டுகளாகியும் யாரும் தண்டிக்கப்படவில்லை.

● ஜெகனாபாத் மாவட்டம், சங்கர் பிகா கிராமம், ஜனவரி 1999. தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு எதிராக சந்தா மற்றும் சௌராம் கிராமங்களின் ரன்வீர் சேனா குண்டர்கள் 11 பேரை மாவோயிச கம்யூனிச மையம் என்ற புரட்சிகர அமைப்பு அழித்தொழித்தது. அதற்கு பழிவாங்கும் செயலாக சங்கர் பிகா கிராமத்துக்குள் புகுந்த ரன்வீர் சேனா, உறங்கிக் கொண்டிருந்த 23 தாழ்த்தப்பட்டவர்களைச் சுட்டுக் கொன்றது. அடுத்த மாதமே நாராயன்பூர் கிராமத்தில் இதே போல 11 தாழ்த்தப்பட்டவர்களைச் சுட்டுக் கொன்றது.

● ஜெகன்னாபாத் மாவட்டம், பெல்சி கிராமம், ஜனவரி 2006. ஒரு நிலப்பிரச்சினை காரணமாக குர்மி மற்றும் யாதவர்கள் ஆகிய ஆதிக்க சாதிக்காரர்களால் 6 தாழ்த்தப்பட்டவர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர்.

**அரியானா**

● ஜஜ்ஜார் மாவட்டம், துலியானா, அக்டோபர் 2002. கிராம போலீசு சாவடிக்கு முன்பாகவே ஐந்து தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் வெட்டிக் கொல்லப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர். மாவட்ட நிர்வாக நீதிபதி, வட்டார வளர்ச்சி அதிகாரி மற்றும் போலீசு துணைக் கண்காணிப்பாளர் முன்னிலையில் இக்கொடூரம் நடந்தது. அருகிலுள்ள நகரில் இருந்து வியாபாரத்துக்காக கால்நடைத் தோலை லாரியில் ஏற்றி வந்த அந்த இளைஞர்கள் பசுக்களைக் கொன்றதாக (பசுவதையாம்!) பழிபோட்டு தசரா விழாவிலிருந்து திரும்பிய ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த இந்துமதவெறியர்கள் இக்கொடூரத்தை நிகழ்த்தினர்.

● ரோடக் மாவட்டம், பிராவார் கிராமம், அக்டோபர் 2003. இக்கிராம பஞ்சாயத்துத் தலைவரான தாழ்த்தப்பட்டவர் காணாமல் போய் நான்காண்டுகளுக்கு மேலாகிறது. புறம்போக்கு மேய்ச்சல் நிலத்தை ஆதிக்க சாதியினர் கைப்பற்றிக் கொள்வதை எதிர்த்ததற்காக அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று புகார் கொடுத்தும், போலி கம்யூனிஸ்டுகள் தலைமையில் ''தலித்'' அமைப்புகள் முறையிட்டும் நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்போதைய ஆளும் தேசிய லோக்தள், காங்கிரசு மற்றும் பா.ஜ.க. ஆகிய ஆதிக்க சாதிக்கட்சிகள் இதற்காகக் கூடிய பேராயத்தைப் புறக்கணித்தனர்.

● சோனேபட், கோகனா கிராமம், ஆகஸ்டு 2005. தாழ்த்தப்பட்ட வால்மீகி இளைஞர் ஒரு ஆதிக்கசாதி இளைஞனைக் கொலை செய்ததாகக் கூறி இக்கிராமத்தின் ஐம்பது வால்மீகிகள் வீடுகள் கொளுத்தப்பட்டன. போலீசு முன்னிலையில் நடந்த இந்த வெறிச் செயலின் பின்னணியில் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் இருந்துள்ளார்.

● கர்னல் மாவட்டம், மகமத்பூர் கிராமம், பிப்ரவரி 2006. இரவிதாசரின் பிறந்தநாள் விழா ஊர்வலத்தை ஆதிக்க சாதியினர் வாழும் தெருவழியாக நடத்தியதாகக் கூறி, ஆதிக்க சாதியினர் கூடி தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்கி அவர்களின் வீடுகளைச் சூறையாடினர். உண்மையான காரணம் என்னவென்றால், உள்ளூராட்சித் தேர்தலில் ஆதிக்க சாதி வேட்பாளர்களை ஆதரிக்க மறுத்ததற்காக பழிவாங்கும் செயலாக இத்தாக்குதல் நடந்துள்ளது.

● ஜூந்த் மாவட்டம், கிலாஜா ஃபார்கர் கிராமம். தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் நடத்திய கலாச்சார நிகழ்ச்சியின் போது தகராறு செய்த ஆதிக்க சாதி இளைஞர்களைத் தட்டிக் கேட்டவர்களை தாக்கி 75 தாழ்த்தப்பட்டோர் வீடுகளை சூறையாடினர். தாழ்த்தப்பட்டவர் குடும்ப உறுப்பினர்களும் தாக்குதலுக்கு இலக்காகினர். பல குடும்பங்


படிப்பகம்

www.padippakam.com

கள் ஊரைவிட்டே ஓடும்படி நேர்ந்தது. ஆதிக்க சாதியினருக்கு எதிரான புகார்களை விலக்கிக் கொள்ளும்படி செய்து, மீண்டும் கிராமத்துக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர்.

— மேற்கண்டவை எல்லாம் வகை மாதிரிகளுக்காகத் தொகுக்கப்பட்ட ஒரு சில வன்கொடுமைச் சம்பவங்கள் தாம்! மலத்தைத் திண்ண வைப்பது, வாயிலே சிறுநீர் கழிப்பது, நிர்வாணப் படுத்திக் கும்பலாகப் பாலியல் வன்முறை செய்வது என்று எவ்வளவோ கொடுமைகள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு எதிராக நாளும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

◆ கல்வி-வேலை வாய்ப்பிலும், உள்ளூராட்சி முதல் சட்டமன்ற - நாடாளுமன்ற அமைப்புகளிலும் இடஒதுக்கீடு போன்ற சீர்திருத்தங்களால் அரசியல், சமூக, பொருளாதாரம், பண்பாடு - கல்வி ஆகியவற்றில் படிப்படியான முன்னேற்றம் அடைவதன் மூலம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிரான குற்றங்கள் குறையும்.

◆ உலகமயமாக்கம் என்ற புதிய பொருளாதாரத்தின் தாக்கம் காரணமாக முதலாளியத்திற்கு முந்தைய வடிவமான சாதிய முறையானது கட்டுடைந்து சிதையத் தொடங்கும்.

— என்ற பழைய, புதிய சீர்திருத்தவாதிகளின் எதிர்பார்ப்பும் மதிப்பீடும் முற்றிலும் தவறாகி வருவதையே மேற்கண்ட சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. சாதியக் கொடுமைகள் பற்றிய கடந்த இருபதாண்டுகளின் புள்ளி விவரங்கள் காட்டுவதென்னவென்றால், அவை எல்லா வகைகளிலும் மேலும் மேலும் பெருகி வருகின்றன. உலகமயமாக்கமோ, வன்கொடுமைச் சட்டமோ அவற்றைக் குறைத்துவிடவில்லை.

இந்த விவரங்கள் இரண்டு உண்மைகளை வெட்டவெளிச்சமாக்குகின்றன. சாதிய அட்டூழியங்கள் நடைபெறும் போதெல்லாம் நடவடிக்கைகள் எடுப்பதுபோல நாடகமாடும் அரசு, குற்றவாளிகளைக் காப்பதிலும், சாதிய சமரசம் செய்வதிலும், ஆதிக்க சக்திகளுக்குத் துணைபோவதுமாக உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரால் நடத்தப்படும் அரசியல் இயக்கங்கள் ஓட்டுக் கட்சி அரசியல் என்ற மைய அரசியல் நீரோட்டத்துக்குள் இழுக்கப்பட்டு, தலித்திய அரசியல் திவாலாகிப் போயுள்ளதையும் காட்டுகின்றன.

- தொடரும்

# சிங்கூர்: சி.பி.எம்-இன் கிரிமினல் அரசியல்

தேசாபிமானி. கேரள சி.பி.எம். கட்சியின் அதிகாரபூர்வ நாளேடு. இடது-வலது என்று போலி கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டாகப் பிரிவதற்கு முன்பு, அது ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் நாளேடாக வெளிவந்து கொண்டிருந்தது. 1947-ஆம் ஆண்டில் தேசாபிமானி நாளேட்டுக்காக கம்யூனிஸ்டுகள் நிதி திரட்டிய போது, கோழிக்கோடு மாவட்டம் சொம்பாலா கிராமத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளரும் எழுதப் படிக்கத் தெரியாத விவசாயப் பெண் தோழருமான பாலோரமாதா, தனது கன்றுக்குட்டியை நன்கொடையாக அளித்தார். கூலி-ஏழை விவசாயிகளையும் தொழிலாளர்களையும் வர்க்க அடித்தளமாகக் கொண்டு இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சியும் தேசாபிமானி நாளேடும், இன்று சாராய வியாபாரிகள், லாட்டரி சீட்டு முதலாளிகள், சீட்டுக் கம்பெனி முதலாளிகள் முதலானோரைத் தமது வர்க்க அடித்தளமாகக் கொண்டு சீரழிந்து நிற்கிறது.

சந்தியாகு மார்ட்டின்; தென்னிந்தியாவின் மிகப் பெரிய லாட்டரி சூதாட்ட முதலாளி. சிக்கிம்-பூடான் லாட்டரி சீட்டு ஏஜெண்டான இவனது சொத்து மதிப்பு, ஏறத்தாழ ரூ.4000 கோடிக்கு மேலிருக்கும் என்று பத்திரிகைகள் சித்தரிக்கின்றன. ஏழை மக்களின் வயிற்றிலடிக்கும் லாட்டரி சூதாட்டத்தின் மூலம் கோடி கோடியாய்க் குவித்துள்ள சமூக விரோதியான மார்ட்டின், இப்போது சி.பி.எம். கட்சியின் 'தோழராகி' விட்டான். கேரள சி.பி.எம். கட்சித் தலைவர்களுடன் கூடிக் குலாவும் அவன், தேசாபிமானி நாளேட்டுக்கு ரூ.2 கோடியை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளான்.

கேரளத்தை ஆளும் சி.பி.எம். முதல்வரான அச்சுதானந்தன் கோஷ்டிக்கும், கட்சியின் மாநிலச் செயலாளரான பினாரயி விஜயன் கோஷ்டிக்குமிடையே நடக்கும் நாய்ச் சண்டை, கட்சி சொத்துக்களை அனுபவிப்பதற்கான அதிகாரச் சண்டையாக முற்றிவிட்ட நிலையில், இக்கோஷ்டிச் சண்டையின் ஊடாக இந்த விவகாரம் மெதுவாகக் கசிந்து இப்போது கேரள மாநிலமெங்கும் நாறுகிறது.

இதனால் சி.பி.எம். கட்சியின் யோக்கியதை சந்தி சிரிக்கத் தொடங்கியதும், ''தேசாபிமானி நாளேடு வெளியிட்ட கடன் பத்திரங்களைத்தான் மார்ட்டின் ரூ.2 கோடிக்கு வாங்கியுள்ளார்; கடன் பத்திரம் முதிர்ச்சியுறும் போது வட்டியோடு அத்தொகையைச் செலுத்துவோம்'' என்று கேரள சி.பி.எம். தலைவர்கள் பசப்பினர். இப்படி கடன் பத்திரங்களை வெளியிட இந்திய ரிசர்வ் வங்கியிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும்; அப்படி எதுவும் நடக்கவில்லையே என்று பத்திரிகைகள் அம்பலப்படுத்தியதும், இதனால் சட்டச் சிக்கல் ஏதும் வருமோ என்று சி.பி.எம். தலைவர்கள் பீதியடைந்தனர். ''தேசாபிமானி சார்பில் கடன் பத்திரங்கள் எதுவும் வெளியிடவில்லை; தேசாபிமானி நாளேட்டில் லாட்டரிச் சீட்டு விளம்பரம் வெளியிட மார்ட்டின் அட்வான்சாக ரூ. 2 கோடி கொடுத்துள்ளார்'' என்று புதிய விளக்கமளித்தனர். பின்னர் சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளர் முன்னிலையில் 'விசாரணை' நடத்தி, இந்தப் பணத்தை மார்ட்டினிடம் திரும்ப ஒப்படைப்பது என்று முடிவாகியுள்ளது.

இப்படி நன்கொடைகள், பங்குகள் விற்பனை, கடன் பத்திரம் முதலானவை தேசாபிமானியோடு நின்றுவிடவில்லை. சி.பி.எம். கட்சியின் ''கைரளி டி.வி.''-இன் 25 லட்ச ரூபாய் பங்குகளை சென்னையைச் சேர்ந்த கள்ளச் சாராய வியாபாரியான 'தோழர்' புருசோத்தமன் வாங்கியுள்ளார். கேரளத்தில் 36 பேரின் சாவுக்குக் காரணமான கள்ளச் சாராயத் 'தோழர்' மணியச்சன் பல லட்ச ரூபாய்க்கான பங்குகளை வாங்கியுள்ளார். இப்படி சமூக விரோதிகள் சி.பி.எம். கட்சியின் 'தோழர்'களாகி விடும்போது, அவர்கள் தமது சமூக விரோத - மக்கள் விரோதச் செயல்களுக்கு சி.பி.எம். கட்சியிடம் ஆதரவும் அங்கீகாரமும் கோர மாட்டார்களா? தேசாபிமானி விவகாரத்தில் நடந்துள்ள இன்னுமொரு பேரம் இதை மெய்ப்பித்துக் காட்டுகிறது.

www.padippakam.com

எல்.ஐ.எஸ். என்ற சீட்டுக் கம்பெனி, கேரளத்தில் தனது முதலீட்டாளர்களை ஏய்த்து கோடி கோடியாய்ச் சுருட்டிய மோசடி நிறுவனமாகும். இம்மோசடி நிறுவனத்தின் மீதான வழக்கை விசாரித்து வந்த ஐ.ஜி.யான சென்குமார், சி.பி.எம். கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் அப்பொறுப்பிலிருந்து மாற்றப்பட்டார். விசாரணை ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கும்போதே இம்மோசடி நிறுவனம், ''ஜோதிஸ்'' என்ற பெயரில் புதிய சீட்டுக் கம்பெனியைத் தொடங்கி நடத்தி வருகிறது.



சி.பி.எம். குண்டர்களால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு எரித்துக் கொல்லப்பட்ட தபாசி மாலிக்-இன் படத்தைக் கையிலேந்தி வேதனையில் துவளும் அவரது தந்தை மனோரஞ்ஜன் மாலிக்.

இந்த மோசடி சீட்டுக் கம்பெனி, வழக்குகளிலிருந்து தப்பிப்பதற்காக தேசாபிமானி நாளேட்டின் பொது மேலாளரான வேணுகோபாலிடம் ஒரு கோடி ரூபாயை லஞ்சமாகக் கொடுத்து பேரம் பேசியது. வேணுகோபாலும் காரியத்தைக் கச்சிதமாக முடித்துத் தருவதாக உறுதியளித்து லஞ்சப் பணத்தை வாங்கிக் கொண்டார். ஆனால், அவர் வாக்களித்தபடி வழக்குகளிலிருந்து இம்மோசடி நிறுவனத்தைத் தப்புவிக்க முடியவில்லை. காலம் கடந்து கொண்டிருந்தது. லஞ்சம் கொடுத்தும் கூட இம்மோசடிக் கம்பெனிக்கே ''அல்வா'' கொடுத்துவிட்டார் 'தோழர்' வேணுகோபால்.

ஆத்திரமடைந்த இம்மோசடிக் கம்பெனி முதலாளிகள், சி.பி.எம். கட்சியின் இதர பிரமுகர்களிடம் புலம்ப, அவர்கள் தங்களுக்கு உரிய பங்கு தரப்படாமல் ஏய்த்ததால் கோபமடைந்து, இந்த விவகாரத்தை வெளியே கசிய விட்டனர். அதைத் தொடர்ந்து, தேசாபிமானி நாளேட்டின் பொதுமேலாளர் பொறுப்பிலிருந்தும் கட்சியிலிருந்தும் வேணுகோபால் நீக்கப்பட்டுள்ளார். இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள சி.பி.எம். தலைவர்கள்-அமைச்சர்களின் பெயர்கள் வெளிவராமல் மூடிமறைத்து, கட்சித் தலைமை இந்த லஞ்சபேர விவகாரத்தை அமுக்கிவிட்டது.

கேரள சி.பி.எம். கட்சியின் யோக்கியதை இப்படியிருக்க, மே.வங்க சி.பி.எம். கட்சியோ இன்னுமொரு படி முன்னேறி, பாசிசப் பயங்கரவாதக் கட்சியாகப் பரிணமித்துள்ளது.

மே.வங்கத்தின் ஹூக்ளி மாவட்டத்திலுள்ள சிங்கூரில் டாடா நிறுவனம் கார் தொழிற்சாலை தொடங்குவதற்காக, இடது முன்னணி அரசு விளைநிலங்களை ஆக்கிரமிப்பதை எதிர்த்து அக்கிராம விவசாயிகள் உறுதியுடன் போராடி வந்த நிலையில், கடந்த டிசம்பர் 18-ஆம் நாளன்று தபாசி மாலிக் என்ற 18 வயதான இளம்பெண் மீது பாலியல் வன்முறை ஏவப்பட்டு, டாடா கார் திட்ட நிலத்தில் எரித்துக் கொல்லப்பட்டார். மே.வங்கத்தையே உலுக்கிய இப்படுகொலையைச் செய்தது திரிணாமுல் காங்கிரசு - நக்சல்பாரிகள் ஆகிய எதிர்த்தரப்பினர்தான் என்று சி.பி.எம். கட்சியின் அதிகாரபூர்வ வார ஏடான ''பீப்பிள்ஸ் டெமாக்கரசி'' வெளிப்படையாகக் குற்றம் சாட்டியது. சிங்கூர் விவசாயிகள் டாடா கார் ஆலைத் திட்டத்துக்கு ஆதரவாக நிற்பதாகவும், போராட்டத்தைத் தூண்டி அரசியல் ஆதாயம் தேட முயற்சித்த எதிர்க்கட்சிகளின் எத்தணிப்புகள் தோல்வியடைந்ததாலும், இப்படுகொலையைச் செய்து பயங்கரவாத பீதியூட்டுவருவதாக மே.வங்க சி.பி.எம். கட்சியினர் கதை கட்டினர்.

ஆனால், இவையனைத்தும் பொய் என்றும், இக்காமவெறிப் படுகொலைச் செய்தது சி.பி.எம். கட்சிக் குண்டர்கள்தான் என்றும் இப்போது மையப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ) நடத்திவரும் விசாரணையில் அம்பமலாகியுள்ளது. தேபு மாலிக் என்ற குண்டர்படைத் தலைவனும், அவனது கூட்டாளிகள் நால்வரும், அவனை வழிநடத்திய சிங்கூர் வட்டாரக் கமிட்டிச் செயலாளர் சுஹ்ரித் தத்தாவும் மையப் புலனாய்வுத் துறையால் கடந்த ஜூன் 23-ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக, ஹூக்ளி மாவட்டக் கமிட்டி உறுப்பினரான திபாகர்தாஸ் கைது செய்யப்படுவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மையப் புலனாய்வுத் துறையால் கைது செய்யப் பட்டுள்ள சி.பி.எம். கட்சியின் கொலைகார குண்டர்படைத் தலைவன் தேபுமாலிக்.



சிங்கூர் வட்டாரக் கமிட்டிச் செயலாளரான சுஹ்ரித் தத்தா, சிங்கூரில் டாடா கார் தொழிற்சாலை நிறுவுவதற்கும், விளை நிலங்களை ஆக்கிரமிப்பதற்கும் முன்னின்றவர். விவசாயிகளின் போராட்டம் வலுக்கத் தொடங்கியதும், டாடா ஆலை அமையவுள்ள நிலத்தைச் சுற்றி வேலியும் தடுப்புச் சுவரும் கட்ட சி.பி.எம். குண்


படிப்பகம்

www.padippakam.com

டர்களைத் திரட்டி அந்த வேலையை மேற்பார்வையிட்டவர்.

சி.பி.எம். குண்டர் படைத் தலைவனாகிய தேபு மாலிக், இப்பகுதியில் கட்டப் பஞ்சாயத்து செய்து வந்தோடு சுஹ்ரித் தத்தா, திபாகர்தாஸ் ஆகியோரின் விசுவாச அடியாளாகவும் செயல்பட்டு வந்தான். இத்தலைவர்களோடு சேர்ந்து அவன் வலம் வருவதைக் கண்டு சி.பி.எம். ஊழியர்களே அவனிடம் பயம் கலந்த மரியாதை காட்டினர். டாடா ஆலை அமையவுள்ள நிலத்தைச் சுற்றி வேலியும் தடுப்புச் சுவரும் அமைத்தவனும் இவன்தான். போராடும் விவசாயிகள் இந்த வேலிக்குச் சேதம் விளைவித்து விடாதபடி இவன் தலைமையிலான குண்டர் படை, சி.பி.எம். கட்சியின் உத்தரவுப்படி இரவு நேர காவல் பணியை மேற்கொண்டு வந்தது.

தபாசி மாலிக், குத்தகை விவசாயியும் மீன் வியாபாரியுமான மனோரஞ்சன் மாலிக்கின் ஒரே மகள். சிங்கூர் விளைநிலப் பாதுகாப்புக் குழுவில் ஊக்கமுடன் செயல்பட்டு வந்த அவர், விரைவிலேயே அப்பகுதியில் பிரபலமானார். சிங்கூர் விவசாயிகளின் போராட்டத்தை மிருகத்தனமாக ஒடுக்கிய போதிலும் மீண்டும் அங்கு போராட்டம் மூண்டெழுவதைக் கண்டு பீதியடைந்த சி.பி.எம். தலைவர்கள், போராட்டத்தில் முன்னணியில் நிற்போரின் பட்டியலை குண்டர் படையிடம் கொடுத்து, அவர்களை உரிய முறையில் கவனிக்குமாறு உசுப்பேற்றி விட்டனர்.

டாடா கார் ஆலை அமையவுள்ள நிலத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள முள்வேலிக்கு அருகில்தான் தபாசி மாலிக்கின் வீடு உள்ளது. கடந்த டிசம்பர் 18-ஆம் நாளன்று நள்ளிரவில் சிறுநீர் கழிக்க வெளியே வந்த தபாசி மாலிக்கை இக்குண்டர் படை வாயில் துணியை வைத்து அடைத்து இழுத்துச் சென்று பாலியல் வன்முறையை ஏவி, அந்நிலத்தில் வெட்டப்பட்டிருந்த குழியில் தள்ளிக் கொன்று பெட்ரோலை ஊற்றி எரித்துள்ளது. இப்போது, மையப் புலனாய்வுத் துறையால் கைது செய்யப்பட்டுள்ள தேபு மாலிக், தனது கூட்டாளிகளையும் எஜமானர்களையும் காட்டிக் கொடுத்து விட்டான்.

பீதியடைந்த சி.பி.எம். கட்சித் தலைமை, ''தேபு மாலிக் சி.பி.எம். ஆதரவாளன் அல்ல; சி.பி.எம். தலைவர்களுக்கும் அவனுக்கும் எந்தத் தொடர்புமில்லை'' என்று கூசாமல் புளுகியது.



**சி.பி.எம். கட்சியின் சிங்கூர் வட்டாரக் கமிட்டி செயலாளர் சுஹ்ரித் தத்தா: குண்டர்படையை வழிநடத்திய தலைமைத் தளபதி.**

கட்சியோடு தொடர்பில்லாத ஒருவன் எதற்காக டாடா கார் அமையவுள்ள நிலத்தில் இரவுக் காவல் வேலையை செய்ய வேண்டும்? அவனை அப்பணிக்கு அமர்த்தியது யார்? என்ற கேள்விகளுக்கு இன்றுவரை சி.பி.எம். கட்சித் தலைமை பதிலளிக்கவில்லை. இது வொருபுறமிருக்க, தபாசி மாலிக் கொல்லப்பட்ட நாளிலும் அதன் பின்னரும் குண்டர்படைத் தலைவன் தேபு மாலிக்குடன் சி.பி.எம். தலைவர் சுஹ்ரித் தத்தா தொலைபேசியில் உரையாடியுள்ளதை ஆதாரங்களுடன் மையப் புலனாய்வுத் துறை வெளிக் கொணர்ந்துள்ளது.

கடந்த ஜூன் 29-ஆம் தேதியன்று சுந்தர்நகர் வழக்கு மன்றத்துக்கு தேபு மாலிக்கும் சுஹ்ரித் தத்தாவும் கொண்டு வரப்பட்டபோது, எதிர்க்கட்சியினரும் உழைக்கும் மக்களும் திரண்டு இக்கொலைக்காரர்களை துடப்பக்கட்டை - செருப்பு மாலையுடன் வரவேற்று, அவர்களைத் தூக்கில் போடக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். சி.பி.எம். கட்சியின் கொலைகார கோரமுகம் மாநிலமெங்கும் அம்பலமானதும், ''இது மைய அரசின் அரசியல் சதி; பொய்க் குற்றம் சாட்டி சி.பி.எம்.மின் கௌரவத்தைக் குலைக்க நடக்கும் சதி'' என்று ஒப்பாரி வைத்த சி.பி.எம். தலைமை, தமது கட்சிக்குள்ளேயே ஒரு விசாரணை நாடகத்தை நடத்தி சுஹ்ரித் தத்தா நிரபராதி என்று தீர்ப்பளித்துள்ளது. சங்கரராமனைக் கொல்ல கூலிப்படையை ஏவி விட்ட காஞ்சி காமகே(ா)டி ஜெயேந்திரன் கைது செய்யப்பட்ட போது, ''பெரிவாள் இப்படியெல்லாம் செய்திருக்கவே மாட்டார்'' என்று பார்ப்பன கும்பல் தாமே தீர்ப்பளித்துத் திருப்திபட்டுக் கொண்டதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு என்பதை அக்கட்சியினர் தான் விளக்க வேண்டும்.

கொலைகாரர்களையும் பயங்கரவாதிகளையும் பயிற்றுவித்துப் பாதுகாக்கும் பாசறையாக சி.பி.எம். கட்சி மாறிவிட்டது என்று குற்றம் சாட்டிய திரிணாமுல் காங்கிரசு கட்சித் தலைவியான மம்தா பானர்ஜி, கடந்த ஜூன் 2-ஆம் நாளன்று படுகொலை செய்யப்பட்ட தபாசியின் தந்தை மற்றும் சிங்கூர் - நந்திகிராமத்தில் சி.பி.எம். குண்டர்களாலும் போலீசாலும் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களோடு பிரதமர் மற்றும் அரசுத் தலைவரைச் சந்தித்து மைய அரசின் தலையீட்டைக் கோரி மனு கொடுத்ததோடு, பாதிக்கப்பட்டோரை பத்திரிகையாளர்கள்முன் நிறுத்தி, சி.பி.எம்.மின் பாசிச பயங்கரவாதத்தை நாடெங்கும் அம்பலப்படுத்தியுள்ளார்.

அதேநாளில், சிங்கூரில் விளைநிலங்கள் டாடாவுக்காக ஆக்கிரமிக்கப்பட்டதால், வேலையிழந்து, வாழ்விழந்து பட்டினியில் பரிதவித்த கூலி விவசாயி சங்கர்தாஸ் மாண்டு போனார். தனது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் 7-8 மாதங்களாக அவர் பட்டினியால் பரிதவித்ததையும், சங்கர்தாசைப் போல 100-க்கும் மேற்பட்ட கூலி விவசாயக் குடும்பங்கள் பட்டினியால் பரிதவித்துக் கொண்டிருப்பதையும், நில ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்டோருக்கு மாற்று வேலை ஏற்பாடு செய்து தருவதாக வாக்களித்துவிட்டு ஏய்க்கும் சி.பி.எம். கூட்டணி அரசின் யோக்கியதையையும் அம்பலப்படுத்தி எதிர்க் கட்சிகள் போராட்டங்களை நடத்தின. சி.பி.எம். கட்சியோ சங்கர்தாஸ் பட்டினியால் சாகவில்லை என்று கோயபல்சு பாணியில் புளுகிக் கொண்டிருக்கிறது.

புரட்சி பேசும் சி.பி.எம். கட்சி தனது வர்க்க அடித்தளத்தை மாற்றிக் கொண்டு முதலாளித்துவ கட்சியாக - பாசிச பயங்கரவாதக் கட்சியாகச் சீரழிந்து விட்டது. சி.பி.எம். கட்சியும் ஆட்சியும் உழைக்கும் மக்களின் நலனுக்கானது என்று இன்னமும் யாராவது நம்பிக் கொண்டிருந்தால், கேரளத்திலும் மே.வங்கத்திலும் நடந்துள்ள அண்மைக்கால நிகழ்வுகளே அவர்களது மூட நம்பிக்கைகளைத் தகர்த்து விடும்.

● **மனோகரன்**

www.padippakam.com

# பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனா?

## சாதி வெறியர்களின் குலதெய்வத்துக்கு வக்காலத்து வாங்கும் விடுதலைச் சிறுத்தைகளின் சீரழிவு

மரங்களை எளிதில் வெட்டி வீழ்த்த உதவும் கருவியான கோடரியின் காம்பும் மரத்தால்தான் ஆனது என்பது எத்தனை பெரிய சோகம்! தனது சொந்த இனத்தையே எதிரியிடம் காட்டிக் கொடுக்கும் நபர்களையும் கோடரிக்காம்பு என்றுதான் அழைக்கிறார்கள். அண்மையில் திருநெல்வேலியில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம், நமக்குக் கோடரிக் காம்பைத்தான் நினைவுக்குக் கொண்டு வருகிறது.

''மதுரை மீனாட்சி கோவில் நுழைவுக்கு உறுதுணையாய் நின்ற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு, தேவர் ஜெயந்தி விழாவை அரசு விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும்'' என்பதுதான் சிறுத்தைகளின் தீர்மானம்.

ஆதிக்க சாதிக்கு அடங்க மறுக்கச் சொன்ன இயக்கம், திடீரென ஆதிக்க சாதியின் குல தெய்வத்துக்கு மணியாட்டத் தொடங்கியிருப்பது அனைவரது புருவத்தையும் உயர்த்த வைத்துள்ளது.

முதலில்; தாழ்த்தப்பட்டோர் மீனாட்சி கோவிலுக்குள் நுழைந்த வரலாறையும் அதில் தேவர் ஆற்றிய பங்கையும் பார்ப்போம்.

காங்கிரசுக் கட்சியின் ராஜாஜி ஆதரவு கோஷ்டியைச் சேர்ந்த மதுரை வைத்தியநாதய்யர், 1939-ஆம் ஆண்டு ஜூலை 8-ஆம் நாள், தும்பைப்பட்டி கக்கன் (பின்னாளில் காமராஜின் அரசில் உள்துறை அமைச்சராக இருந்தவர்) உள்ளிட்ட தாழ்த்தப்பட்டோர்கள் 5 பேரையும், விருதுநகர் சண்முக நாடாரையும் அழைத்துக் கொண்டு, அதுவரை தாழ்த்தப்பட்டோர்களுக்கும், நாடார் உள்ளிட்ட சாதியினருக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்த மதுரை மீனாட்சி கோவிலுக்குள் நுழைந்தார். இக்கோவில் நுழைவுக்கு அன்றைய கோவில் அறங்காவல் அதிகாரியான ஆர்.எஸ்.நாயுடு உறுதுணையாக இருந்தார்,

1939-இலோ, அதற்கு முன்னரோ மீனாட்சி கோவிலுக்குள் நுழையும் உரிமை கோரி தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஏதேனும் போராட்டம் நடத்தப்பட்டதா, அக்கோவில் நுழைவில் பெருந்திரளாக தாழ்த்தப்பட்ட மக்கள் பங்கெடுத்தனரா என்றால் இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், 1920-களிலும் கோவில் நுழைவு உரிமை கோரி நாடார்களாலும், சுயமரியாதை இயக்கத்தாலும் பல போராட்டங்கள் நடத்தப்பட்டாலும், அந்தக் கோரிக்கையை முன்வைத்து தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் அமைப்பாகத் திரண்டு அப்போது போராடியதில்லை.

1932-ஆம் ஆண்டில் சென்னையில் ஜெ.சிவசண்முகம் (பிள்ளை) தலைமையில் கூடிய தாழ்த்தப்பட்டோர் மாநாடு கூட ''கோவில் நுழைவு அவ்வளவு அவசியம் இல்லை என்று கருதி'' தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. *(''பண்பாட்டு அசைவுகள்'', தொ.பரமசிவன், காலச்சுவடு பதிப்பகம், பக்.188).*



தேவர் சாதி வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட தாழ்த்தப்பட்டோர் தலைவரான இம்மானுவேல்

1934-ஆம் ஆண்டில் டாக்டர் சுப்பராயனின் தலைமையிலான சென்னை மாகாண அரசு கொண்டுவர இருந்த கோவில்நுழைவு மசோதாவை ஆதரிக்கச் சொல்லி காந்தி கேட்டுக்கொண்டபோது , டாக்டர் அம்பேத்கர் அதனை ஆதரிக்க மறுத்துள்ளார். ''கல்வி, பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளில் தாழ்த்தப்பட்டோர் முன்னேறும்போது ஆலய நுழைவு தானாகவே நிகழும்'' என்று காந்திக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பட்டிருந்தார். *(''சமூக உரிமைப் போராளி இம்மானுவேல் தேவேந்திரர்'', தமிழவேள், பண்பாட்டு ஆய்வகம், பக். 89)*

ஆக, தாழ்த்தப்பட்ட மக்களே இக்கோரிக்கையை முன்வைத்துப் போராடாத நிலையில், இதற்காகப் பேரளவில் திரளாத நிலையில், மதுரை மீனாட்சி கோவில் நுழைவை காங்கிரசு கட்சியினர் நடத்த வேண்டிய அவசியம் என்ன?

அன்றைக்கு காங்கிரசுக்குள் இருந்த சத்தியமூர்த்தி-ராஜாஜி கோஷ்டிப்பூசலில், சத்தியமூர்த்தி கோஷ்டிக்கு இணையாகத் தமக்கு ஆதரவாளர்களை திரட்டவும், கட்டாய இந்தியைத் திணித்து பொதுமக்களிடம் சம்பாதித்திருந்த வெறுப்பைத் தணிக்கவும் ராஜாஜி கோஷ்டி கண்டுபிடித்த தந்திரமே கோவில் நுழைவு.

கோவில் நுழைவில் முத்துராமலிங்கத் தேவரின் பங்கு என்ன?

ராஜாஜி கோஷ்டியால் கோவில் நுழைவு நடக்க இருப்பதை அறிந்திருந்த மீனாட்சி கோவில் பட்டர்கள், ராஜாஜியின் எதிரணியைச் சேர்ந்த முத்துராமலிங்கத் தேவரை அணுகி, கோவில் நுழைவை அடியாட்கள் வைத்து அடித்து, தடுத்து நிறுத்த வேண்டினார்கள். தேவரால் அதற்கு உதவ முடியவில்லை. காரணம், கோவில் நுழைவு நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்புதான், அவரின் தூண்டுதலால் மதுரை பின்னலாடைத் தொழிற்சாலை, சிந்தாமணி திரையரங்கம் ஆகிய


படிப்பகம்

www.padippakam.com

வற்றில் சாதி ரீதியான வன்முறை நடைபெற்றிருந்ததால், அவர் எந்நேரமும் கைதாகக் கூடிய சூழ்நிலையில் இருந்தார். எனவே, தேவரால் பட்டர்கள் வேண்டுகோளின்படி அடியாட்களை அனுப்பி வைக்க முடியவில்லை. *(மேற்கூறிய நூல், பக். 47-48 மற்றும் ''முதுகுளத்தூர் கலவரம்'', தினகரன், யாழ்மை வெளியீடு, ப்க். 106).*

தேவரின் எதிர்ப்பில்லாமல் கோவில் நுழைவு நடந்தது. இதுதான் முத்துராமலிங்கத் தேவரின் கோவில் நுழைவு பங்களிப்பு!

தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவைப் பெறாத, தேவரின் 'பங்களிப்பு' ஏதும் இல்லாத கோவில் நுழைவு நாடகத்தைத் திரித்து சிறுத்தைகள் தீர்மானமாய்ப் போடுவது ஏன்?

முத்துராமலிங்கத் தேவர் எங்காவது தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்காகப் போராடியிருக்கிறாரா?

தனது மாற்றாந்தாயின் விளைநிலங்களில் விளைச்சலைக் கொள்ளையடிக்கவும், அதைத் தடுக்க முயன்ற தாசில்தாரின் காலை வெட்டவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த சோலைக் குடும்பன் போன்ற அடியாட்களை தயார் செய்து அடிமைகளாக வைத்திருந்தவர்தான், தேவர். *(''சமூக உரிமைப் போராளி....'', பக். 95-98 மற்றும் ''முதுகுளத்தூர் கலவரம்'', பக். 102)*

தேர்தல் பிரச்சாரத்தில் ''ஓட்டு இல்லையானால் வேட்டு'' என மிரட்டியே தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளைக் கைப்பற்றிய தேவர், தான் பதவியில் இருந்தவரைக்கும் முதுகுளத்தூர் வட்டார வளர்ச்சிக்குப் பெரும் தடையாகவே இருந்திருக்கிறார். *(''முதுகுளத்தூர் கலவரம்'', பக். 54; ''சமூக உரிமைப் போராளி...'', பக். 205).* சாலை வசதிகள் வந்து விட்டால், தேவர்களைக் கைது செய்ய காவல் துறை எளிதில் ஊருக்குள் வந்து விடும் என்றும் பயமுறுத்தி, அடிப்படை வசதிகளை வரவிடாமல் தடுத்து வந்தவர்தான் அவர். *(''சமூக உரிமைப் போராளி....'', பக். 205 மற்றும் ஆர்.சிதம்பரபாரதியின் சட்டமன்ற உரை, 30.10.1957; ''சட்டப் பேரவையில் தேவர் பற்றிய சதி வழக்கு'', ஜீவ பாரதி, சுவாமிமலை பதிப்பகம், பக். 163).*



**பன்னாட்டு முதலாளிகளுக்குத் தமிழ் மண்ணைத் தாரை வார்க்கும் கருணாநிதிக்குக் காவடி: நெல்லை மண்ணுரிமை மாநாட்டில் மு.க.வுக்கு நினைவுப் பரிசளிக்கும் விடுதலைச் சிறுத்தைகள்.**

முதுகுளத்தூரில் தனக்கு வாக்களிக்காத ஒடுக்கப்பட்ட மக்கள் மீது கொலை வெறியைத் தூண்டி விட்டு தேவேந்திரர்கள் 17 பேரின் உயிரைக் குடித்த சாதிவெறித் தலைவரின் பிறந்த நாளுக்கு அரசு விடுமுறை கேட்பதுதான் ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் கடமையா?

தேவேந்திரர்கள் உழைத்து சேகரித்து வைத்திருந்த உணவு தானியங்களை எரியும் வைக்கோல் படப்புகளுடன் சேர்த்து எரித்தும், பெண்களைப் பலாத்காரம் செய்தும், தாழ்த்தப்பட்டோரின் குடிநீர் கிணறுகளில் மலத்தையும், மண்ணெண்ணெய்யையும் ஊற்றி கோரத்தாண்டவம் ஆடிய சாதிவெறிக் கும்பலை உசுப்பேற்றிவிட்ட மனிதரை ஆதரிப்பதென்பது, தாழ்த்தப்பட்டோர் விடுதலையின் செயல்திட்டமா?

முதுகுளத்தூர் கலவரத்தைக் கட்டுப்படுத்த நடந்த சமாதானக் கூட்டத்தில், தாழ்த்தப்பட்டோரின் தலைவரான இம்மானுவேல் சேகரன் கையெழுத்திட்ட சமாதான ஒப்பந்தத்தில் சமமாகக் கையெழுத்திட மறுத்தும், ''என்னை எதிர்த்துப் பேசுமளவுக்கு ஒரு பள்ளப் பயலை வளர்த்து விட்டிருக்கிறீர்கள். நீங்களும் மறவர்களா?'' எனக் கேட்டு தன் அடியாட்களைக் கொம்பு சீவி விட்டும், இம்மானுவேலின் படுகொலைக்குக் காரணமாய் இருந்தவர்தானே தேவர்? *(''சட்டப் பேரவையில்...'' பக். 17-18 மற்றும் உள்துறை அமைச்சர் எம்.பக்தவச்சலம் சட்டசபையில் தாக்கல் செய்த அறிக்கை 26.10.1957; ''சமூக உரிமைப் போராளி...'', பக். 139)*

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்த சுவாமி சகஜானந்தா எனும் தலைவர் பலமுறை காங்கிரசு சார்பில் சட்டசபையில் உறுப்பினராக இருந்துள்ளார். சிதம்பரம் பகுதியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காகக் கல்வி நிலையம் நிறுவியவர் இவர். இவரின் தொண்டைப் பாராட்டிப் பல கட்டுரைகள் எழுதினார், விடுதலைச் சிறுத்தைகள் எம்.எல்.ஏ.வான ரவிக்குமார். திருமாவளவனும் சகஜானந்தரின் பள்ளி விழாக்களில் கலந்து கொள்பவர்.

முதுகுளத்தூரில் தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது, சட்டசபையில் சுவாமி சகஜானந்தா ''ஒருவன் கொலை செய்தால் அவனைத் தூக்கிவிடுவது வழக்கம். ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் செய்துள்ள பெரும் பிழைக்கு அவரை எந்தத் தூக்கில் போடுவது?... சர்க்கார் கொஞ்சம்கூடப் பார்க்காமல் அவரைத் தூக்கிலிட வேண்டும்'' எனப் பேசியுள்ளார். *(''சட்டப் பேரவையில்...'', பக். 225)*

விடுதலைச் சிறுத்தைகள் கொண்டாடும் சகஜானந்தாவோ, தேவருக்குத் தூக்குத் தண்டனை தரச்சொல்லியிருக்கிறார். ஆனால் சிறுத்தைகளோ, தேவர் ஜெயந்திக்கு விடுமுறை கேட்கின்

www.padippakam.com

றனர். இதற்கு பெயர் விடுதலை அரசியலா? சந்தர்ப்பவாதமா?

தாழ்த்தப்பட்டோர் மீது தீண்டாமையைக் கடைபிடித்து வரும் ஜெயேந்திரனுடன் கூட்டணி சேர்ந்திருக்கும் ''தடா'' பெரியசாமி போன்ற கோடரிக் காம்புகளுக்கும், தாழ்த்தப்பட்டோர்கள் மீது தன் வாழ்நாள் முழுக்க வன்கொடுமையை ஏவிய தேவர் மீது பாசம் பொழியும் விடுதலைச் சிறுத்தைகளுக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?

யார் யாரை எல்லாம் செருப்பால் அடிப்போம் என்று சொன்னார்களோ, அவர்களுடன் எல்லாம் கூட்டு சேர்ந்து அம்பேத்கரை பலி கொடுத்து உ.பி.யில் ஆட்சியைப் பிடித்திருப்பது பகுஜன் சமாஜ் கட்சி என்றால், சாதி வெறியை வளர்த்து வந்த தேவருக்கு வெண்சாமரம் வீசக் கிளம்பியிருக்கிறது, 'அடங்க மறுப்போம்' என்று சொல்லி இயக்கம் வளர்த்த சிறுத்தைகள் கட்சி.

இனி, மேலவளவு முருகேசனைக் கொன்றவர்களுக்குப் பொது மன்னிப்பு கோரி கையெழுத்து இயக்கம் நடத்தவும், திண்ணியத்தில் தாழ்த்தப்பட்டோரை மலம் தின்ன வைத்த சாதி வெறியினரைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தவும் கூடத் தயாராவார்கள்.

ஏற்கெனவே இராமதாசுடன் 'தமிழ்ப் பாதுகாப்பு' கூட்டணி அமைத்து வன்னியர்களின் சாதிப் பகையில் இருந்து தாழ்த்தப்பட்டோரைக் 'காப்பாற்றி' விட்டார்கள். இப்போது தேவர்களின் சாதிப்பகையில் இருந்து தாழ்த்தப்பட்டோரைக் 'காப்பாற்ற' போர்த்தந்திரம் வகுக்கிறார்கள் போலும். நல்ல முன்னேற்றம்தான்!

• இரணியன்

## ''தாழ்த்தப்பட்டோரின் வாழ்வுரிமை பறிப்பு! போராடிப் பெற்ற உயர்நீதி மன்ற உத்தரவைச் செயல்படுத்து!''

### — கண்டன ஆர்ப்பாட்டம்

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்திலுள்ள சிகரல அள்ளி கிராமத்தைச் சேர்ந்த 90 தாழ்த்தப்பட்ட குடும்பத்தினர், வசிக்க வீடின்றி ஓடைகளின் கரையோரங்களில் குடிசை போட்டு வாழ்ந்து வந்த நிலையில், 1980-ஆம் ஆண்டு இம்மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டப்படி, சின்னப்பொண்ணு என்பவரது நிலத்தைத் தமிழக அரசு கையகப்படுத்தி, உரிய தொகையையும் அளித்துள்ளது. ஆனால், சின்னப்பொண்ணு வகையறா தனது சாதி மற்றும் கட்சியின் பலத்தைக் காட்டி மிரட்டி, பத்தாண்டுகளாகத் தாழ்த்தப்பட்டோரை நிலத்தின் பக்கமே அண்டவிடாமல் செய்து, தொடர்ந்து கொடுமைப் படுத்தி வந்தது. மறுபுறம் இக்கும்பல் நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற முயன்று தோல்வியடைந்ததால், தாழ்த்தப்பட்ட மக்களை உருட்டி மிரட்டி பட்டாவை அரசிடமே திரும்ப ஒப்படைக்குமாறும், குடியிருக்கும் குடிசை வீடுகளை இடித்துவிட்டு அங்கேயே காலனி வீடு கட்டிக் கொள்ளுமாறும் அச்சுறுத்தி வந்தது.

இப்பகுதியில் இயங்கிவரும் வி.வி.மு. இக்கொடுஞ் செயலுக்கு எதிராகத் தாழ்த்தப்பட்டோரை அணிதிரட்டி '90-களின் மத்தியில் போராடியபோது, இக்கும்பல் கொடிய ஆயுதங்களுடன் வெறிகொண்டு தாக்கியது. பெண்கள், முதியோர் உள்ளிட்டு பலர் இத்தாக்குதலில் படுகாயமடைந்து, பென்னாகரம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து சாதிக் கலவரமும் சட்டம்-ஒழுங்கு பிரச்சினையும் ஏற்படும் என்று சாக்குப் போக்கு கூறி அதிகாரிகள் இந்த ஊர்ப் பக்கமே தலைகாட்டவில்லை. கிராம நிர்வாக அலுவலர் முதல் மாவட்ட ஆட்சியர் வரை பலமுறை மனு கொடுத்துப் போராடியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த நியாயமும் கிடைக்கவில்லை. பின்னர் இம்மக்கள் வி.வி.மு.வின் உதவியோடு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இவ்வழக்கை மனித உரிமைப் பாதுகாப்பு மையம் (HRPC) நடத்தி வந்தது.




கடந்த 12 ஆண்டுகளாக இந்த வழக்கை விசாரித்த உயர்நீதி மன்றம், ''பட்டா வழங்கியும் 24 ஆண்டு காலமாகத் தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் அனுபவிக்க முடியாமல் இருப்பது வருந்தத்தக்கது; இது அநீதியானது'' என்று கடந்த ஜூன் 6-ஆம் தேதியன்று தீர்ப்பளித்து, எட்டு வாரத்திற்குள் நிலத்தை அளந்து அத்துகாட்ட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை வட்டாட்சியருக்கும் உத்தரவிட்டுள்ளது.

இதற்குப் பின்னரும்கூட, ஆதிக்க சக்திகள் இக்கிராம தாழ்த்தப்பட்ட மக்களை மிரட்டி அச்சுறுத்தி வருகின்றன. அதிகார வர்க்கமோ தனது சிகப்பு நாடாத்தனத்துடன் இழுத்தடிக்கிறது. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்குவதாகப் பீற்றிக் கொள்ளும் தமிழக அரசு, பட்டா கிடைத்தும் அதைத் தாழ்த்தப்பட்டோர் அனுபவிக்க விடாமல் தடுக்கும் ஆதிக்க சக்திகளை அதிரடிப் படையை ஏவி ஒடுக்காமல் கைகட்டி நிற்கிறது.

இக்கொடுமையை அம்பலப்படுத்தியும், உயர்நீதி மன்ற உத்தரவை உடனடியாகச் செயல்படுத்தக் கோரியும் உழைக்கும் மக்களை அணிதிரட்டி 19.7.07 அன்று பென்னாகரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக தோழர் அருண் தலைமையில் வி.வி.மு. ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. வி.வி.மு.வின் உறுதியான போராட்டத்தால் நியாயமான தீர்ப்பைப் பெற்றுள்ள சிகரலஅள்ளி தாழ்த்தப்பட்ட மக்கள், பெருந்திரளாக இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றதோடு, நீதிமன்ற உத்தரவைச் செயல்படுத்த அடுத்தகட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

— விவசாயிகள் விடுதலை முன்னணி,
பென்னாகரம் வட்டம்.



படிப்பகம்

# ‘வளர்ச்சி’யில் சீனா அவலத்தில் தொழிலாளர்கள்

உடலெங்கும் காயங்கள்; சீழ் பிடித்து புரையோடிவிட்ட தீப்புண்கள், அழுக்கடைந்து கிழிந்து தொங்கும் ஆடைகள், துயரத்தை நெஞ்சிலே தாங்கி உருக்குலைந்து நிற்கும் தொழிலாளர்கள்... சீனாவின் செங்கற்சூளைகள்-நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து அண்மையில் மீட்கப்பட்டுள்ள இக்கொத்தடிமைகளைக் கண்டு உலகமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. ஒருவரல்ல, இருவரல்ல; ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இக்கொத்தடிமைக் கொடூரத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். இவர்களுள் பாதிக்கும் மேற்பட்டோர் சிறுவர்கள்; மற்றவர்கள் கிராமப்புற விவசாயிகள்.

ஒரு நாளைக்கு 16 முதல் 18 மணிநேர ஓய்வில்லாத வேலை; சோர்ந்து உட்கார்ந்தால் கங்காணிகளின் சவுக்கடி; வேலை செய்ய மறுத்தால் சம்மட்டி அடி அல்லது பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் சூடு போடப்படும். அங்கிருந்து யாரும் தப்பச் செல்ல முடியாதபடி வேட்டை நாய்களும் துப்பாக்கி ஏந்திய கங்காணிகளும் காவலுக்கு நிற்பர். வெற்றுக் கால்களுடன் பாதுகாப்புச் சாதனங்கள் ஏதுமின்றி வேலை செய்யும் இக்கொத்தடிமைகளுக்கு ஏற்பட்ட விபத்துகள் ஏராளம். ஆனாலும் எந்த மருத்துவ சிகிச்சையும் கிடையாது. படுகாயமடைந்தோ, நோய்வாய்ப்பட்டோ ஒரு தொழிலாளி மரணமடைந்தால், அவர் அங்கேயே புதைக்கப்படுவார். சீனாவின் ஷான்சி, ஹோனான் மாநிலங்களிலுள்ள செங்கற் சூளைகளிலிருந்து மீட்கப்பட்ட சிறுவர்கள் அளித்த சாட்சியங்களைக் கண்டு அந்நாட்டு மக்கள் விக்கித்து நிற்கிறார்கள்.

சீனாவின் போலி கம்யூனிச ஆட்சியாளர்கள், சோசலிச விவசாயக் கூட்டுப் பண்ணைகளைத் தகர்த்து தனியாருக்கு நிலத்தைச் சொந்தமாக்கி, முதலாளித்துவத்தை நிலைநாட்டியதைத் தொடர்ந்து, இலட்சக்கணக்கான விவசாயிகள் வேலையிழந்து வாழ்விழந்து நிற்கின்றனர். நகரங்களுக்கு நாடோடிகளாக ஓடி, அங்கும் பிழைக்க வழியின்றி செங்கற் சூளைகளில் கொத்தடிமைகளாகி உழல்கின்றனர்.

இக்கொத்தடிமைத் தொழிலில் கொழுத்த ஆதாயம் கிடைப்பதால், சமூக விரோத கும்பல்களால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் கடத்திச் செல்லப்பட்டு செங்கற் சூளைகளில் கொத்தடிமைகளாக்கப்பட்டுள்ளனர். தமது அன்புக் குழந்தைகளைக் காணவில்லை என்று துடிக்கும் பலநூறு பெற்றோர்களின் கண்ணீர் கதைகளைத் தொடர்ந்து வெளியிட்டு பத்திரிகைகளும் மனித உரிமை அமைப்புகளும் குற்றம் சாட்டிய பிறகு, அதிகார வர்க்கமும் போலீசும் வேறுவழியின்றி நடவடிக்கைகளை மேற்கொண்ட போதுதான், இக்கொத்தடிமைக் கூடாரங்கள் பற்றிய உண்மைகள் வெளிவந்துள்ளன.

ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கும் மேலாக நாடெங்கும் இத்தகைய கொத்தடிமைக் கூடாரங்கள் அதிகார வர்க்கம்-போலீசின் ஆதரவோடு நடந்து வந்துள்ளன என்றும், உள்ளூர் போலி கம்யூனிஸ்டு தலைவர்களின் பினாமிகளே இவற்றை நடத்தி வந்துள்ளனர் என்றும் பத்திரிகைகள் ஆதாரங்களோடு அம்பலப்படுத்தி வருகின்றன. பெய்ஜிங்கிலுள்ள சீன மக்கள் பல்கலைக் கழக சமூகவியலாளரான சௌ ஷியோ ஜெங், "சீனாவில் ஏறத்தாழ 2 கோடி பேர் கொத்தடிமைகளாக உள்ளனர்; அமைப்பு ரீதியில் திரண்டுள்ள புதுப் பணக்கார குற்றக் கும்பல்களே நாட்டை வழிநடத்துகின்றன" என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகிறார். சீனாவின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள், நாட்டில் கொத்தடிமைக் கொடூரங்கள் நீடிப்பதை வேறுவழியின்றி ஒப்புக்கொண்டு, இவற்றுக்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

ஆனால், இது வெறும் காகித அறிவிப்பாகவே முடிந்து போய்விட்டது. கொத்தடிமைக் கூடாரங்களை நடத்தி வந்த புதுப்பணக்கார குற்றக் கும்பல்களில் ஒரு சிலரைப் போலீசார் கைது செய்த போதிலும், அவர்கள் அனைவரும் விரைவிலேயே விடுதலையாகி விட்டனர். அவர்கள் மீது பெயரளவுக்குக்கூட வழக்குகள் போடப்படவில்லை. காரணம், இக்குற்றக் கும்பல்களின் கூட்டாளிகளான போலி கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தில் இருப்பதுதான்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, சீன போலி கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழுவில் அங்கம் வகித்த முக்கிய புள்ளியான லீ பெங்-கும் அவரது குடும்பமும் வீட்டுமனை ஊழல் மற்றும் நிதி மோசடிகளில் கோடி கோடியாய் சுருட்டிய விவகாரம் நாடெங்கும் நாறியது. அந்த விவகாரம் அடங்குவதற்குள் சியாமென் துறைமுக நகரைச் சேர்ந்த அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஊழல்-கடத்தல் மோசடிகளில் சிக்கினார். அதைத் தொடர்ந்து பல போலி கம்யூனிஸ்டு அமைச்சர்களும் அதிகாரிகளும் கூட்டுக் கொள்ளையில் ஈடுபட்ட விவகாரம் சந்தி சிரித்தது. சீன போலி கம்யூனிஸ்டு அரசாங்கம் ஊழல் அதிகாரிகள் சிலரைக் கைது செய்து சிறையிலடைத்ததோடு, சிலருக்குத் தூக்குத் தண்டனை விதித்து, இத்தகைய ஊழல்-மோசடிகளை ஒடுக்க முயற்சித்தது.

**சீன முதலாளிகளின் கொத்தடிமைக் கொடூரம்: உடலெங்கும் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ள தொழிலாளி.**



ஆனால், அதற்குப் பின்னரும் ஷாங்காய் நகர போலி கம்யூனிஸ்டுத் தலைவர் சென் லியாங் யூ, காண்டன் நகர செயலாளர், ஹூஹான் மாநிலச் செயலர் எனப் பலரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட விவகாரம் அம்பலமானது. இப்போது, குற்றக் கும்பல்களோடு கூட்டுச் சேர்ந்து போலி கம்யூனிஸ்டு பிரமுகர்கள் கொத்தடிமைக் கூடாரங்களை நடத்தி வந்த விவகாரம் வெளிவந்துள்ளது.

www.padippakam.com



**சீனாவில், ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கும் மேலாக கொத்தடிமைக் கூடாரங்களை அதிகார வர்க்கம்-போலீசின் ஆதரவோடு உள்ளூர் போலி கம்யூனிஸ்டு தலைவர்களின் பினாமிகளே நடத்தி வந்துள்ளனர்.**

செங்கற் சூளைகள், சுரங்கங்கள் மட்டுமல்ல; நகரங்களில் கட்டுமானத் தொழில், ஆயத்த ஆடை தயாரிப்புக் கூடங்கள், ஏற்றுமதிக்கான விளையாட்டு பொம்மை தயாரிப்பு, நெசவு மற்றும் கால்ணி தயாரிப்பு நிலையங்களிலும் அறிவிக்கப்படாத கொத்தடிமைத்தனம் கொடிகட்டிப் பறக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என்று கூறி, சீன ஆட்சியாளர்கள் இத்தகைய தொழிற்கூடங்களில் தொழிலாளர்கள் சங்கமாகத் திரளவும் தடை விதித்துள்ளனர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு சீனாவின் முதலாளிகள், தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டிக் கொண்டு சம்பளம் கூட கொடுக்காமல் ஏய்க்கின்றனர்.

பெய்ஜிங் நகரில் ஓராண்டு காலமாக சம்பளம் தராமல் ஏய்த்த அன்னிய கட்டுமான நிறுவன முதலாளிகளின் பங்களாக்களை முற்றுகையிட்டு, தடுப்பரண்களை எழுப்பி 2003-ஆம் ஆண்டில் சீனத் தொழிலாளிகள் போராடினர். ஷென்சென் நகரில் சம்பளம் தராமல் ஏய்த்த முதலாளிகளின் கார்களை சாலைப் பணியாளர்கள் அடித்து நொறுக்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். இதே போல தெற்கே ஃபூஷன் நகரில் ஜவுளி ஆலைத் தொழிலாளர்களும், வடகிழக்கே டாகுயிங் எண்ணெய் துரப்பணத் தொழிலாளர்களும், ஜியாங்ஷி மாநிலத்தில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும் சம்பள பாக்கிக்காகவும் பென்ஷன் தொகை முடக்கப்பட்டதை எதிர்த்தும் போராடினர்.

முறையாக சம்பளப் பாக்கியைக் கொடுக்காவிடில் உரிமத்தை ரத்து செய்து விடுவோம் என்று சீன ஆட்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்த போதிலும் எந்த முதலாளியும் அதைப் பொருட்படுத்துவதில்லை. முதலாளிகளின் சட்டைப் பையிலுள்ள சீன அரசாங்கம் அதற்கு மேல் ஒன்றும் செய்யவும் முடியவில்லை. தீவிரமாகிவிட்ட வேலையின்மையைச் சாதகமாக்கிக் கொண்டு தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கி முதலாளிகள் சுரண்டுவதும், சம்பளம் கூடத் தராமல் ஏய்ப்பதும் நாடெங்கும் தீவிரமாகிவிட்டது. சீனாவின் நகர்ப்புற வேலையின்மை 7%-க்கும் மேலாக அதிகரித்துக் கொண்டே போகிறது. இது 9%-க்கு எட்டிவிட்டால் சமூகக் கொந்தளிப்புகள் தீவிரமாகிவிடும் என்று சீனாவின் முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளே எச்சரிக்கின்றனர்.

இருப்பினும், சீனாவின் யதார்த்த நிலைமைகளை மூடி மறைத்துவிட்டு, சீனா பிரம்மாண்டமான வளர்ச்சியை எட்டிவிட்டதாகவும், வல்லரசாகப் பரிணமித்து வருவதாகவும் ஏகாதிபத்தியவாதிகள் உச்சி முகர்ந்து பாராட்டுகின்றனர். உலக வர்த்தகக் கழகத்தில் உறுப்பு நாடாகச் சேர்ந்து, அன்னிய மூலதனத்தைத் தாராளமாக அனுமதித்து, பொருளாதார வளர்ச்சியில் புதிய சாதனை படைத்துள்ளதாக ஏற்றிப் போற்றுகின்றனர். வரைமுறையற்ற சுரண்டல்-சூறையாடலுக்கு கதவை அகலத் திறந்து விட்டுள்ள "சீனாவைப் பார்த்து நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள்" என்று இங்குள்ள போலி கம்யூனிசத் துரோகிகளுக்கு உபதேசிக்கின்றனர். சீன போலி கம்யூனிச ஆட்சியாளர்களின் ஏகாதிபத்திய - தனியார் முதலாளித்துவ சேவையை, சோசலிசத்தை நோக்கிய வளர்ச்சியாகச் சித்தரித்து இங்குள்ள இடது - வலது போலி கம்யூனிஸ்டுகள் துதிபாடுகின்றனர்.

ஆனால், சோசலிசம் பூத்துக் குலுங்கிய சீனாவோ, இன்று கொத்தடிமைத்தனத்திலும் கொடூர சுரண்டலிலும் சிக்கிக் குமுறிக் கொண்டிருக்கிறது. சீன மக்களோ, புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையை எதிர்நோக்கி மீண்டும் ஒரு சோசலிசப் புரட்சிக்காகக் காத்திருக்கிறார்கள்.

● குமார்

*சீன 'வளர்ச்சி'யின் மறுபக்கம்:*
**செங்கற்சூளைகளிலிருந்து மீட்கப்பட்ட கொத்தடிமைகள்.**




படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

கொள்வதற்குப் பல சமூகக் காரணங்கள் இருப்பதை நாம் அறிவோம். ஆனால், காசுமீரிலோ இவற்றையெல்லாம்விட, இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைகளால் விசாரணை, தேடுதல் வேட்டை என்ற பெயரில் பொது மக்கள் அவமானப்படுத்தப்படுவதுதான் தற்கொலைக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. ''எல்லை கடந்த மருத்துவர்கள் சங்கம்'' என்ற தன்னார்வத் தொண்டு அமைப்பு எடுத்த ஓர் ஆய்வில், ''இந்த அவமானப்படுத்துதல் தங்களின் மன அமைதியைக் குலைத்து விடுவதாக'' காசுமீர் மக்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



ரஃபீக் கோஜ்ரி என்ற பெண்ணைப் பாலியல் பலாத்காரப்படுத்த முயன்ற இராணுவ அதிகாரியை போலீசிடம் ஒப்படைப்பதற்காக அரை நிர்வாணமாக இழுத்து வரும் பந்திபுர் பொது மக்கள்.

தினந்தோறும் இப்படிப்பட்ட அவமானங்களைச் சந்தித்து வந்த, வடக்கு காசுமீர் கிராமத்தைச் சேர்ந்த மன்சூர் அகமது, ஒருநாள் இந்த மன அழுத்தத்தைப் பொறுக்க முடியாமல், விஷத்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்றார்; இறுதியில், சாவின் பிடியில் இருந்து அகமது காப்பாற்றப்பட்டுவிட்ட போதிலும், அவர் மன நோய்க்கானச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு காசுமீர் முசுலீமும் அகமது மன்சூரைப் போல, இந்த அவமானப்படுத்துதலை நேரடியாக அனுபவிக்க வேண்டும் என்பதில்லை. வீட்டை விட்டுத் தெருவில் இறங்கி நடந்து செல்லும் பொழுது, துப்பாக்கி முனைகளை வெறித்துப் பார்த்தபடிதான் நடந்து செல்ல வேண்டும் என்றால், உங்கள் மனநிலை அமைதியாக இருக்க முடியுமா? எந்நேரமும் வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு இராணுவம் உள்ளே வரலாம்; யாரையாவது இழுத்துக் கொண்டு போகலாம் என்ற நிலையில், பாதுகாப்பான வாழ்க்கை என்பதைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

கடந்த ஆண்டு காசுமீர் பள்ளத்தாக்கில் எடுக்கப்பட்ட மாதிரி ஆய்வொன்றில், ''காசுமீர் நிலைமை'' பற்றி 510 பேரிடம் பலதரப்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டன. அவர்களுள் பாதிப்பேர் தாங்கள் பாதுகாப்பற்ற தன்மையில் வாழ்வதாகக் கூறியிருந்தனர். மூன்றில் ஒரு பங்கு பேரிடம் தற்கொலை செய்து கொள்ளும் மன ஓட்டம் இருப்பது கண்டறியப்பட்டது.

''காசுமீர் பள்ளத்தாக்கில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒருவருக்கு மனப்பதற்றம், மன அழுத்தம், எதையோ பறிகொடுத்த உணர்வு போன்ற மன நோய்களில் ஏதாவது ஒன்று இருப்பதைக் காண முடியும்'' என காசுமீர் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை பேராசிரியர் பஷீர் கூறுகிறார்.


''விசாரணை, கைது, தேடுதல் வேட்டை, போலி மோதல் கொலை, கொட்டடிச் சாவுகள், மானபங்கப்படுத்துவது, பாலியல் வன்முறையை ஏவிவிடுவது'' என இந்த அவமானப் படுத்தும் குற்றச் செயல்கள் அனைத்தும் தீவிரவாத எதிர்ப்பு என்ற பெயரில் நியாயப்படுத்தப்படுவதுதான் மிகவும் அபாயகரமானதாகவும், அவமானமிக்கதாகவும் இருக்கிறது.

சமீபத்தில், வடக்கு காசுமீரில் உள்ள பந்திபுர் நகரைச் சேர்ந்த 17 வயதான ரஃபீக் கோஜ்ரி என்ற இளம் பெண்ணை, இரண்டு இராணுவ அதிகாரிகள், அவரது வீட்டிற்குள் ''தீவிரவாதிகள்'' போல வேடமிட்டுக் கொண்டு நுழைந்து பாலியல் பலாத்காரப்படுத்த முயன்றனர். இந்தக் குற்றவாளிகளைக் கையோடு பிடித்த பொதுமக்கள், அவர்களை போலீசிடம் ஒப்படைப்பதற்காக, அவர்களின் ஆடைகளைக் களைந்துவிட்டு ஊர்வலமாக இழுத்துச் சென்றனர்.

குற்றவாளிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய போலீசோ, அதற்கு மாறாக, பொதுமக்களின் மீது தடியடி நடத்தியதோடு, அவர்களைச் சிறையிலும் அடைத்து அவமானப்படுத்தியது. இராணுவமோ, ''தங்களின் அதிகாரிகள் உளவறியச் சென்ற தேசபக்தர்கள்'' என இந்தக் கற்பழிப்பு முயற்சியை நியாயப்படுத்தியிருக்கிறது.

காசுமீர் வன்முறைக் களமாக மாறிப் போனதற்கு முசுலீம் தீவிரவாதிகள் தான் பொறுப்பு என ஒட்டு மொத்த பழியையும் பிறர் மீது போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்ள பார்க்கிறது, இந்திய அரசு. ''தீவிரவாதி''களை எதிர்த்துப் போராடுவதாகக் கூறும் இந்திய இராணுவம், காசுமீரில் புத்தனின் கொல்லாமை தத்துவத்தையா போதித்துக் கொண்டிருக்கிறது? காசுமீர் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமை கோரிக்கைக்குத் தீர்வு காணாமல் இழுத்தடிப்பதன் மூலம், அம்மாநிலத்தை வன்முறைக் களமாக மட்டுமல்ல; திறந்தவெளி பைத்தியக்கார விடுதியாகவும் மாற்றிக் கொண்டிருக்கிறது, இந்திய அரசு.

தற்கொலை செய்து கொண்ட தமது உறவினரின் சடலம் தேடப் படுவதைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருக்கும் பெண்கள். (நன்றி: இந்தியா டுடே.)



● ரஹீம்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08
www.padippakam.com

# ஏழையின் உயிரைப் பறித்த கல்விக் கடன்

தனது மகன் சுரேஷின் பொறியியல் படிப்பிற்கான கட்டணத்தைக் கட்ட முடியாமல் போனதால், பெரம்பலூர் மாவட்டம் - வளவெட்டிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த பன்னீர் செல்வம் கடந்த மாதம் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டு விட்டார். தனது மகனின் படிப்புச் செலவிற்காக ஏற்கெனவே ஒரு இலட்ச ரூபாய் வரையில் வெளியே கடன் வாங்கிவிட்ட பன்னீர் செல்வம், இந்த ஆண்டிற்கான கட்டணத்தைக் கட்டுவதற்கு அரசு வங்கிகள் தரும் கல்விக் கடனை நம்பியிருந்தார். கார் வாங்கவும், ஆடம்பரப் பொருட்கள் வாங்கவும் ஆளைத் தேடிப் பிடித்து கடன் தரும் வங்கிகள், சிறு காய்கறி வியாபாரியான பன்னீர் செல்வத்தை அலைக்கழித்து, அவமானப்படுத்தி வெறும் கையாகத் திருப்பி அனுப்பி விட்டன.



பன்னீர் செல்வம்




கல்விக் கடன் உள்ளிட்ட அரசின் வெற்றுக் கவர்ச்சித் திட்டங்களை அம்பலப்படுத்தி புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

பன்னீர் செல்வத்தின் இறுதி ஊர்வலத்தில்...
பொறியியல் படிக்கும் சுரேஷ் (இடது ஓரம்) மற்றும் அவரது சகோதரர்கள்.



ஓட்டுக் கட்சிகள், இது அதிகாரிகளின் தவறு எனக் குற்றம் சுமத்துகின்றன. வங்கி அதிகாரிகளோ, கடன் விதிமுறைகளைக் காட்டி நழுவிக் கொள்கிறார்கள். இந்த மழுப்பல்களையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், காசில்லாதவன் உயர் கல்வி பெற முடியாது என்ற உண்மை நமது முகத்தில் அறைகிறது. உயர்கல்வி வழங்க வேண்டிய பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்ட அரசு, அதை மூடி மறைப்பதற்காகக் கல்விக் கடன் என்ற கவர்ச்சி வியாபாரத்தை நடத்துகிறது.

பன்னீர் செல்வத்தின் தற்கொலை, இயலாமையினால் நிகழ்ந்துவிட்ட துயரச் சம்பவம் அல்ல. அது, கல்விக் கொள்ளைக்கு எதிரான ஏழை மக்களின் கலகக் குரல்.

கல்விக் கடன் கேட்டு வங்கி அதிகாரிகள் முன் கைகட்டி நிற்பதைவிட, கல்வி தனியார்மயமாக்கப் பட்டதை எதிர்த்துப் போராடுவதுதான் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி. போராடினால் படிப்பு பாழாகிவிடும் எனச் சிலர் மாணவர்களை அச்சுறுத்தலாம். ஆனால், கல்வி தனியார்மயமாவதை எதிர்த்து முழுவீச்சோடு போராடாமல் இருப்பதால்தான், கல்வி எட்டாக் கனியாக மாறி வருகிறது என்பதை வாழ்க்கை அனுபவம் உங்களுக்கு உணர்த்தவில்லையா?